விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 05 புதன்கிழமை (21.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

### தடுப்பூசி கண்டுபிடிக்கப்படும்வரை

# கொரோனாவின் பிடியிலிருந்து இலங்கையால் விடுபட முடியாது

## சபையில் உண்மையைச் சொன்னார்

### சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி

(கொழும்பு)

கொரோனா வைரஸுக்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு அது இலங்கை மக்களுக்கு செலுத்தப்படும் வரை கொரோனாவின் பிடியிலிருந்து இலங்கையால் விடுபட முடியாது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பாராளுமன்றில் பகிரங்கமாக உண்மையை ஒத்துக் கொண்டார்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

### 500 கிலோ மஞ்சள் தமிழகத்தில் மீட்பு

(கொழும்பு)

இலங்கைக்கு கள்ளத் தோணியில் கடத்தப்படவிருந்த 500 கிலோகிராம் சமையல் மஞ்சள் மூட்டைகளை நடுக் கடலில்வைத்து ராமேஸ்வரம் சுங் 23

## 186 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை கொத்தணியின் 23

### யாழ்.காங்கேசன்துறை கடற்படை முகாமில்

# மேலும் ஒரு பெண் கடற்படை சிப்பாய்க்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை கடற்படைமுகாமில் பணியாற்றி வீடு சென்ற பெண் கடற்படை சிப்பாய்க்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

கண்டி கட்டுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவில் உள்ள ராஜபிஹில்லா பகுதியில் வசிக்கும் 21 வயதான பெண் கடற்படை சிப்பாய ஒருவருக்கு கொரோனா வைரஸ்தொற்று உறுதி 23




### பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த

# மாகந்துரே மதுஷ் சுட்டுப் படுகொலை

### மாளிகாவத்தையில் அதிகாலை சம்பவம்



(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய புள்ளியான மாகந்துரே மதுஷ் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்தபோது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை மாளிகாவத்தையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

# மாநகர சபை பதவியை இழந்தார் மணிவண்ணன்

### விரைவில் வர்த்தமானி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் பதவியை சட்டத்தரணி வி.மணிவண்ணன இழந்துவிட்டார் என்று அறிவித்துள்ள யாழ்ப் 23

## கிளிநொச்சியில் கைக்குண்டுடன் மூவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில கைக்குண்டுடன் 23

### மருதங்கேணி வைத்தியசாலைக்கு

# 21 தொற்றாளர்கள் அழைத்து வரப்பட்டனர்

(கரணவாய்)

கொரோனா வைத்தியசாலையாக அறிவிக்கப்பட்ட மருதங்கேணி வைத்தியசாலைக்கு 21 கொரோனா தொற்றாளர்கள் அழைத்து வரப் 23

# 20ஆவது திருத்தத்தின் நான்கு பிரிவுகளுக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

### உயர் நீதிமன்றின் தீர்ப்பை பாராளுமன்றத்தில் அறிவித்தார் சபாநாயகர்

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்ட வரைபின் சில பிரிவுகள், நடைமுறையில் உள்ள அரசியலமைப்புடன், முரண்படுவதாக உயர்நீதிமன் 23

## சபாநாயகரின் முகக் கவசம் எங்கே? சபையில் சஜித்

(கொழும்பு)

சுகாதார வழிமுறைகளை பின் 23

### தனிமைப்படுத்தலை முடித்து

# வீடு திரும்ப இருந்த 24 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்களை பரிசோதனை செய்ய 23

### 'சர்வஜன வாக்கெடுப்பின்றி'


# 20ஆவது திருத்தத்தை நிச்சயம் நிறைவேற்றுவோம்

### பிரதமர் மகிந்த திட்டவட்டம்

15ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்கான சேவை தொடர மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congrats!



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த

**விநாயகமூர்த்தி ஞானேந்திரன்**

(ஞானம்)

அவர்கள் 06.10.2020 அன்று நல்லூர்ப் பிரதேச சபையின் உறுப்பினராக பதவி ஏற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்வடைவதோடு அவர்தம் சேவை மக்களுக்கு தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-559)

வாழ்த்துவோர் :
புலம்பெயர் நாட்டில் வாழும் நண்பர்கள்,
கொக்குவில் நண்பர்கள்.

# அடுத்த கட்ட கொரோனா பரவல் பாராளுமன்றத்தில் இருந்தே ஆரம்பிக்கும்

## ரஞ்சித் மத்தும பண்டார

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த கட்ட கொரோனா பரவல் பாராளுமன்றத்தில் இருந்தே ஆரம்பிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள் ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அச்சம் வெளியிட்டுள்ளது.

எனவே 20ஆவது அரசியலமைப்பு திருத்த விவாதத்துக்கு முன் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதி மக்களை சந்திக்கின்றபோது அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

எனவே அது பாராளுமன்றத்தில் ஏனையவர்களுக்கு பரவும் ஆபத்தும் இருக்கிறது.

எனவே நாளை வியாழக்கிழமை 20ஆவது திருத்தம் தொடர்பான விவாதம் நடைபெறுவதற்கு முன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ரஞ்சித் மத்தும பண்டார கோரியுள்ளார். (ம-03)

# யாழில் நேற்று 251 பேருக்கு கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்றுச் செவ்வாய்க்கிழமை(20) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 251 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ள தாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் அனுப்பிவைக்கப்பட்ட மாதிரிகளில் குறித்த பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம-03,18)


SUPER BALL

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 1250 | நிறம் | ஊதா |
| சீட்டிழுப்பு திகதி | 19.10.2020 | தினம் | திங்கட்கிழமை |

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்

A 01 09 56 74

SUPER 500 4 5 9 5

அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
0114 824 824, 0112 333 778 or 1919
DLB<space>LOT<space>SB send 919
0114 825 825


# மரண அறிவித்தல்



## பவளரத்தினம் (சித்தி) வெற்றிவேல்

தெல்லிப்பளை மேற்கு, அம்பனையைப் பிறப்பிடமாகவும் விளாத்தியடி உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பவளரத்தினம் (சித்தி) வெற்றிவேல் நேற்று (20.10.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - மீனாட்சியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகன் - வள்ளியின் அன்பு மருமகளும் வெற்றிவேலுவின் அன்பு மனைவியும் ஜீவசாந்தினி (ஜேர்மனி), ஜீவகாந்தன் (பிரான்ஸ்), ஜீவநந்தினி (சுவிஸ்), ஜீவநளினி, ஜீவயாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேரியன் (ஜேர்மனி), யூடிற் (பிரான்ஸ்), ஜெயகாந்தன் (சுவிஸ்), நிஷாந்தன், தயாளன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கியாறா, சாறா, மிதுசன், தனுசன், பிளோறியான், கிறீஸ், மனோஜ், ஹரீஸ், சஹீரா, அனிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் கிருஷ்ணபிள்ளை, நடராசா, இரத்தினம், சபாரட்டினம் (இத்தாலி), காலஞ்சென்ற வரதராஜா, நாகேஸ்வரி, வசந்தராணி (ஜேர்மனி), செல்வராணி (சுவிஸ்), யோகராணி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.10.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4430)

விளாத்தியடி லேன்,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
077 690 1389
தகவல்:-
குடும்பத்தினர்

# துயர் பகிர்கின்றோம்..



தோற்றம்
1967.05.17

மறைவு
2020.10.20

எமது பாடசாலையின் அளவையியல்
மற்றும் அரசியல் விஞ்ஞானம் கற்பிக்கும் சிரேஷ்ட ஆசிரியை

## திருமதி மகாலட்சுமி குகதாஸ்

அவர்கள் நேற்று [ 20.10.2020 ] செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(4431)

பாடசாலைச் சமூகம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

# தமிழர்களை பகடைக்காயாகப் பாவிக்கும் செயலைக் கைவிட்டு

# 13 ஆவது திருத்தத்தை உடன் அமுலாக்க செயலாற்றுங்கள்

## இந்தியாவிடம் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

**(கொழும்பு) இந்தியா 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். அந்த தார்மீக கடமையிலிருந்து இந்தியா தவறும் பட்சத்தில், இந்திய-இலங்கை ஒப்பந்தம் கேள்விக்குள்ளாக்கப்படுவதோடு மாகாண சபை முறைமையும் நீர்த்துப்போகும் பேராபத்தே உள்ளது.**



இலங்கை தமிழர்களை இனியும் இந்தியா பகடைக்காய்களாக பயன்படுத்தக்கூடாது. 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதிலிருந்து அதனை மேம்படுத்தி அர்த்த புஷ்டியான அரசியல் தீர்வொன்றை நிலைபெறச் செய்வதற்கு உடனடியானதும் காத்திரமானதுமான தலையீடுகளை இந்தியா செய்ய வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 33ஆண்டுகளைக் கடந்துள்ளபோதும் தற்போது வரையில் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் மாறிமாறி ஆட்சிப்பீடமேறிய ஆட்சியாளர்கள் அலட்சியம் செய்தே வந்திருக்கின்றனர்.

அவ்வாறான நிலையில் தற்போதைய ஆட்சியாளர்கள் தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினை பாராளுமன்றில் கொண்டிருக்கின்றோம் என்ற இறுமாப்புடன் அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பகிர்வு தொடர்பில் காணப்படும் ஒரேயொரு ஏற்பாடான 13ஆவது திருத்தச்சட்டத்தினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

விடயதானத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவே மாகாண சபை முறைமைகளை ஒழிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக கூறி வருவதோடு, இந்திய எதிர்நிலை வாதத்தினையும் தோற்றம்பெறச் செய்து வருகின்றார். அதேநேரத்தில் தேர்தல்கள் ஆணையாளர் மாகாண சபை தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதமும் எழுதியுள்ளார்.

ஆனால் இதுவரையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆட்சியில் உள்ளவர்கள் எந்தவிதமான பிரதிபலிப்பையும் செய்ததாக இல்லை.

அதேநேரம் ஜனநாயக கட்டமைப்புக்களை தகர்த்து ஜனநாயக விழுமியங்களுக்கு மரணஅடி அளிக்கப்போகும் 20ஆவது திருத்தச்சட்டத்தினை நிறைவேற்றுவதற்கே அரசாங்கம் முனைந்து கொண்டு இருக்கின்றது.

அதற்கு அடுத்ததாக புதிய அரசியலமைப்பு ஒன்றையும் உருவாக்குவதற்கான முனைப்புக்கள் செய்யப்படுகின்றன. "ஒரேநாடு ஒரே சட்டம்" என்ற கோட்பாட்டில் சர்வாதிகாரத்தினை முன்னெடுக்கும் வகையில் தனி நபருக்கான அதிகாரக்குவிப்பை இலக்கு வைத்தே புதிய அரசியலமைப்பு மேற்கொள்ளப்படப் போகின்றது என்பது திண்ணம்.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் இந்தியாவின் பங்களிப்பு காலங்காலமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தற்போது கூட பிராந்தியத்தின் தலைமைப் பாத்திரத்தினைக் கொண்டிருக்கும் இந்தியாவின் மீது தமிழர்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பினையும் கொண்டிருக்கின்றார்கள்.

அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்தியா தனது நலன்களுக்கு அப்பால் சென்று உரிய தலையீடுகளை செய்ய வேண்டும். கடந்தகாலங்களில் இலங்கை அரசாங்கத்துடன் முரண்பாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே இந்தியா தமிழர்களின் விடயத்தில் தீவிரத்தன்மையை காட்டியது. இத்தகைய பகடைக்காய்களாக பயன்படுத்தும் நிலைமையை இந்தியா கைவிட வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

எனவே, இந்திய மத்திய அரசானது, தொடர்ச்சியாக கடைப்பிடிக்கும் மென்போக்கினை விடுத்து நேரடியான தலையீடுகளைச் செய்வதன் மூலமாகவே தமிழர்களின் பாதுகாப்பும், எதிர்காலமும் உறுதிப்படுத்தப்படுவதோடு இந்தியாவின் பூரண அமைதியும் உறுதி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-299)

# பாதாள உலகக்குழுத் தலைவன் மதுஷ் சுட்டுக் கொலை

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக்குழுத் தலைவர் மாகந்துரே மதுஷ் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மாகந்துரே மதுஷ் என்று அழைக்கப்படும் சமரசிங்க ஆராச்சிலாகே மதுஷ் லக்ஸித மாளிகாவத்தை பகுதியில் பொலிஸாருக்கும் பாதாள குழுவினருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.



கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் உள்ள வீட்டுத்திட்டமொன்றில் ஹெரோயின் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு மாகந்துரே மதுஷ் தகவல் வழங்கிய நிலையில், அவரை அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்ற போது பாதாளகுழு உறுப்பினர்களால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இதன்போது மாகந்துரே மதுஷ் உயிரிழந்ததுடன், இரண்டு பொலிஸார் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மாகந்துரே மதூஷ் அடையாளம் காட்டிய இடத்தில் இருந்து 220 மில்லியன் ரூபா பெறுமதியான 22 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள், 2 கைத்துப்பாக்கிகள் மற்றும் பாதள உலகக் குழு உறுப்பினர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாதாள உலகக்குழுவின் தலைவரும் போதைப்பொருள் கடத்தல் காரருமான மாகந்துரே மதுஷ், கடந்த ஆண்டு பெப்ரவரிமாதம் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர்கள் தேர்தலில் போட்டியிடலாம்; முடிவில் மாற்றமில்லை

## - நீதியமைச்சர் அலிசப்ரி -

(கொழும்பு)

20வது திருத்தத்தில் இரட்டை பிரஜாவுரிமை தொடர்பில் எந்த மாற்றத்தையும் மேற்கொள்வதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் 20வது திருத்தத்தில் மூன்று மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் நீதியமைச்சர் இதனை நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு வழங்கப்படும் அதிகாரம் அரச ஸ்தாபனங்களில் கணக்காய்வு மற்றும் அவசர சட்ட மூலங்களை சமர்ப்பித்தல் தொடர்பான விடயங்களிலேயே அரசாங்கம் மாற்றங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

பாராளுமன்றம் தனது ஆயுட்காலத்தின் இரண்டரை வருடங்களை பூர்த்தி செய்த பின்னரே அதனை கலைக்க முடியும் என்ற திருத்தத்தை முன்னெடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச ஸ்தாபனங்களில் கணக்காய்வினை மேற்கொள்வதை 19வது திருத்தத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் இரட்டைப் பிரஜாவுரிமையை கொண்டுள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிப்பது என்ற முடிவில் மாற்றங்கள் இல்லை என தெரிவித்துள்ளார். அண்மையில் விமல் வீரவன்சவும் இதே தகவல்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# பாராளுமன்றம் பொது இடமல்ல சுகாதார அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

**கொரோனா தடுப்பு விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானியின் படி பாராளுமன்றம் ஒரு பொது இடமாக கருதப்படவில்லை என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**



நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அமைச்சர், பொதுக் கூட்டங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பாராளுமன்றத்திற்கு பொருந்தாது என்பதால் மன்றத்தின் நடவடிக்கைகள் எந்தவித தடையும் இல்லாமல் தொடர முடியும் என குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றாலும், பாராளுமன்ற அமர்வுகளில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுகாதார விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி தாக்கத்தை செலுத்தாது எனக் கூறினார்.

மேலும் வர்த்தமானியின் சில உட்பிரிவுகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொருந்தும் என்றும் பொய்யான கதைகளின் மூலம் பொதுமக்களை ஏமாற்ற எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

கொரோனா கட்டுப்பாடுகளை முன்வைத்து 20 ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தை ஒத்திவைக்க எதிர்க் கட்சி கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஜ-4)

# '20'இல் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை

## சபையில் வெளிப்படுத்தினார் சபாநாயகர்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றில் தெரியப்படுத்தினார்.

அந்த சரத்துக்களுக்கு ஒப்புதல் பெறவோ அல்லது மாற்றங்களை மேற்கொள்ளவோ பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலித்து உயர் நீதிமன்றம் ஒக்டோபர் 10 ஆம் திகதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டு



அதனைச் சபாநாயகருக்கு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு இனி அடுத்த ஆண்டில் விசாரணைக்கு

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டு மனு மீதான வழக்கு மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மகிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அமர்வின் முன் ஆராயப்பட்டது.

முறைப்பாட்டாளர் தரப்பின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள், வழக்கு விசாரணைகளை பெப்ரவரி 19 ஆம் திகதி நடத்துவது என தீர்மானித்துள்ளனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா இந்த முறைப்பாட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

முல்லைத்தீவு குருகந்தை ரஜமஹா விகாரையின் விகாராதிபதியின் உடலை தகனம் செய்வது தொடர்பான முல்லைத்தீவு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீறி, அவரது உடலை தகனம் செய்தன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குற்றம் சுமத்தி, ஞானசார தேரருக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. (நி-7)

# மக்கள் வழங்கிய ஆணையை தவறாக பயன்படுத்தவே 20 ஆவது திருத்தம்



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு மக்களும், மதத் தலைவர்களும் சுட்டிக்காட்டிய விடயங்களை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை.

அரச அதிகாரங்களை குடும்ப ஆட்சிக்குள் கொண்டு வர முன்னெடுக்கும் ஜனநாயக விரோத செயற்பாடுகளை நாட்டு மக்கள் தொடர்ந்து எதிர்க்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை வீழ்ச்சியடைந்து செல்லும் பொருளாதார நிலையில் உள்ளதாகவும், சர்வதேச கடன் பொறிக்குள் சிக்கிக் கொள்ளும் நிலையில் காணப்படுகிறது என்றும் சர்வதேச பொருளாதார மற்றும் முதலீடு தொடர்பான மதிப்பீடு நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. மக்கள் வழங்கிய ஆணையை தவறான வழியில் பயன்படுத்த அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

20 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட பாரதூரமான ஏற்பாடுகளை நாட்டு மக்களும் மதத் தலைவர்களும் சுட்டிக்காட்டினார்கள்.

இவர்களின் கோரிக்கைகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது.

புதிய அரசியலைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை ஆதரவை வழங்கினார்கள்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பை புறக்கணித்து அரசாங்கம் சர்வாதிகார போக்கில் செயற்படுகிறது என அவர் இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# இலங்கைக்கு வருகை தரவுள்ளார் அமெரிக்க இராஜாங்கச் செயலர்



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமையை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.


நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவிற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையிலேயே இலங்கைக்கும் அவர் வருகை தரவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இதன்போது இரு தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் அவர் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து 15 ஆயிரம் பேர் அறிந்திருந்தனர்

## நிலாந்த சாட்சியம்



**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்த சஹ்ரான் ஹாசிம் திட்டமிட்டிருந்ததை சுமார் 15 ஆயிரம் பேர் அறிந்திருந்ததாக அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலாந்த ஜயவர்தன வெளிப்படுத்தியுள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாட்சியமளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 11ஆம் திகதியாகும் போதே இந்த தாக்குதல் தொடர்பில் சுமார் 10 ஆயிரம் பேர் அறிந்திருந்ததாக அவர் தமது சாட்சியத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேல் மாகாணத்திலுள்ள சுமார் 8000 அதிகாரிகளுக்கு அறிவித்ததாக பொலிஸ்மா அதிபர் ஏற்கனவே ஆணைக்குழுவில் தெரிவித்ததாகவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 15 ஆயிரம் பேர் தாக்குதல் குறித்து அறிந்திருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## சீனக் கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைப்பு



(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இயங்கிய சீன கசிப்பு உற்பத்தி சாலை சுற்றிவளைக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனர்கள் அங்கு சட்ட விரோதமான முறையில் இந்த நிலையத்தினை நடத்தி வந்துள்ளனர்.

நாட்டில் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில் கொள்ளுப்பிட்டியில் சீன கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கியுள்ளமை பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-4)

## சர்வாதிகாரப் போக்கிலான '20' ஐ எதிர்க்க வேண்டும்

### மக்களிடம் புதிய – ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொரோனாப் பரவலைத் தடுக்க மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளையும் சுய கட்டுபாடுகளையும் கடைப்பிடித்து தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

அதேவேளை அவசர அவசரமாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட இருக்கும் அரசியலமைப்பிற்கான இருபதாவது திருத்தத்தை மக்கள் எதிர்ப்பு தெரிவித்து நிராகரிக்க வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இருபதாவது திருத்தத்திற்கு வாக்களிக்கும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தமக்கு வாக்களித்த மக்களின் தலைகளில் மண் போடுபவர்களாகவே இருப்பர்.

20 ஆவது திருத்தம்கொண்டு வரப்படுகிறது என்பதை கடந்த காலப்பட்டறிவின் ஊடாக அனைத்து மக்களும் உணர வேண்டியது அவசியமாகும்.

ஒரு இருண்ட இலங்கையை மீண்டும் காண வைப்பதற்கோ கோட்டா-மகிந்த அரசாங்கம் 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வர நிற்கிறது:

எனவே நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் எதிராகக் கொண்டுவரப்படவுள்ள இராணுவமயமாக்கப்பட்ட சர்வாதிகாரத்திற்கான 20 ஆவது திருத்தத்தை எமது கட்சி ஏனைய இடது சாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளோடு இணைந்து வன்மையாகக் கண்டித்து எதிர்த்து நிற்கிறது என குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## குணமடைந்தோர் 3457

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 17 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, இதுவரை 3,457 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

## "ஜனாதிபதி கிராமத்துடன் உறவாடல்" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

மாத்தளை, வில்கமுவ, ஹிம்பிலியாகட கிராமத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய நிர்மாணப் பணிகள், சேவைகளை வழங்குவதற்கு முன்னுரிமையளித்து நிகழ்ச்சித்திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு கடந்த 2 ஆம் திகதி மாத்தளை மாவட்டத்திற்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்த நிலையில் குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராமிய மக்களின் நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சனைகள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடி அவற்றை அதிகாரிகளுக்கு முன்வைத்து தீர்வுகளை பெற்றுக் கொடுப் பது சுற்றுப்பயணத்தின் நோக்கமாகும்.(ஜ-4)

# புங்குடுதீவின் முடக்கம் நீக்கம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் அமுல்படுத்தப்பட்ட தற்காலிக முடக்கநிலை நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை முதல் நீக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

எனினும், புங்குடுதீவு மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டுமெனவும், குறித்த பகுதியானது சுகாதாரப் பிரிவினரால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுமெனவும் தெரிவித் தார்.



இதேவேளை, கம்பஹா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கடந்த மூன்று வாரங்களாக யாழ். புங்குடுதீவுப் பகுதி தற்காலிக முடக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பகுதியில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்கள் ஏற்படவில்லை யென சுகாதாரப் பகுதியினரால் உறுதிப்படுத்தப்பட்டு ள்ளது.

இதனையடுத்தே தற்காலிக முடக்க நிலை நீக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4-18)



மைக்கல் நேசக்கரம் ஊடாக சுவிட்சர்லாந்து நாட்டில் வாழ்ந்துவரும் திருமதி - திருக்குமார் கலைச்செல்வியின் நிதியுதவியில் சாவகச்சேரியில் முன்னாள் போராளிக்கு குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. (படம்:-மகாலிங்கம்)

# அடிப்படை வசதிகளேதும் இன்றி மாற்றப்பட்ட மருதங்கேணி வைத்தியசாலை

(கரணவாய்)

மருதங்கேணி வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டதையடுத்து வைத்தியசாலை செயற்பாடுகள் அருகில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள போதிலும் அங்கு அடிப்படை வசதிகள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

அங்கு கொண்டுசெல்லப்பட்ட மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் வைக்க இடமின்றி கொண்டுவரப்பட்ட இடத்தில் குவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

மருதங்கேணி வைத்தியசாலை கொரோனா சிகிச்சை சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டதையடுத்து அங்கு உள்ள பொருட்கள் அனைத்தும் அருகில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டன.

ஆனால் அங்கு போதிய இடவசதி இன்மையால் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் அப்படியே குவிக்கப்பட்டு காணப்படுகிறது.

மலசலகூடங்களிற்கு நீர் வசதிகளும் இல்லை என்பதுடன் மூன்று நாட்களாக அங்கு சிகிச்சைகள் எவையும் இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (5,4,60)



மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் தமது தாய்க்கழகமாகிய மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேச சபையினர், மானிப்பாய் பொலிஸார் மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்களின் உதவியுடன் வலி தென் மேற்கு பிரதேச சபை பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களில் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (படம்:-கஜிதன்)



இணுவில் பாலாவோடையில் அமைக்கப்பட்டுள்ள ஈஸ்வரி இராஜயோக சிகிச்சை நிலையம் மற்றும் யோகாசன பயிற்சி நிலையம் ஆகியன நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் திறந்து வைக்கப்பட்டன.

நிலையத்தலைவர் கருணாசாகர நரசிம்மதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.தர்ஷன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருட்டுச் சம்பவம்; இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டு இலத்திரனியல் பொருட்கள் மற்றும் தளபாடங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை, நொச்சிமோட்டைப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் அமைந்திருந்த வீட்டில் இருந்து தொலைக்காட்சி, குளிரூட்டி, மின்னழுத்தி, கட்டில், கண்ணாடி மேசை என சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கடந்த ஒரு மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டதாக ஓமந்தைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வவுனியா ஓமந்தை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மற்றும் போதை ஒழிப்பு பொலிஸார் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின் போது குறித்த பொருட்கள் வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டுள்ளதுடன், பிக்கப் ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-250)

# வீதியை புனரமைப்புச் செய்யுமாறு மக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மறவன் புலோ மணல் காட்டு வீதியில் உள்ள சாலா குளம் உரிய புனரமைப்பு இன்றிக் காணப்படுவதால் மழை காலங்களில் மணற் காட்டு வீதி சேதமடைகிறது.

இதனால் குறித்த வீதி ஊடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக பொதுமக்கள் சாவகச்சேரி பிரதேசசபையிடம் தெரிவித்தனர்.

மக்களின் கோரிக்கையை அடுத்து பிரதேச சபையினர் விவசாய சம்மேளனம் மற்றும் உரிய திணைக்களங்கள் குளத்தினை புனரமைப்புச் செய்து மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். (5,4,30)

# தப்பிச் சென்ற முதியவரை மோதித் தள்ளியது மோ.சைக்கிள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தப்பிச் சென்ற போது சங்கத்தானைப் பகுதியில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார்.

ஏ9 வீதியால் நடந்து சென்ற முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் வரணி இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த 78 வயது முதியவர் படுகாய மடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த மூளாய் பகுதியைச் சேர்ந்த நபரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (5-4-30)

# வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இப்படியும் உதவி செய்யலாம்

(சாவகச்சேரி)

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் சாவகச்சேரி நகர சபை வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மரணச் சடங்கிற்கு வாடகைக்கு அமர்த்தும் கார் ஒன்றினை கொள்வனவு செய்ய வேண்டுமென நகர சபையின் கல்வயல் வட்டார உறுப்பினர் ப.நந்தகோபால் சபையில் பிரேரணை ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளார்.

அவர் தனது பிரேரணையில்,

சாவகச்சேரி நகரசபை 2021 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மரணச் சடங்குகளுக்கு வாடகைக்கு விடும் கார் ஒன்றினைக் கொள்வனவு செய்து அதனைச் சாவகச்சேரியில் பல வருமானம் குறைந்த குடும்பங்களின் மரணச் சடங்கின் போது மிகக் குறைந்த வாடகையில் சடலத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்ல உதவ வேண்டும்.

இது பல குடும்பங்களுக்கு மிகப்பெரிய உதவியாக அமையும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)



அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்தனையின் செயல் வடிவம்

வடக்கின் விவசாயப் புரட்சி

North Lanka IIT City Campus
Faculty of Agriculture

Agriculture Research உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய Modern Research Farm
Kariyalai Nakapaduvaan, Poonakary.

Proposed by – S.A.Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT
City Campus
Faculty of Agriculture

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat
Poonakary
Kilinochchi.

Location –
Kariyalai Nakapaduvaan
Poonakary Divisional


NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.

UGC அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்

தகமை - NVQ Level 04 / O/L / A/L

Duration: 03 Years முழுநேரப் பயிற்சி

விண்ணப்ப முடிவுத் திகதி: 22.10.2020

கற்கைநெறி ஆரம்பம்
23.10.2020

தொடர்புகளுக்கு: 076 7504535, 077 8849677, 077 8657957

பதிவுகளுக்கு ➡ தலைமைக்காரியாலயம்: Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.

# விழாக்கள், பொதுக்கூட்டங்களை தவிர்க்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)



விழாக்கள் மற்றும் பொதுக் கூட்டங்களில் பங்கேற்க வேண்டாமென இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா, பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நேற்று முன் தினம் கொரோனாத் தொற்றுக்குள்ளான 87 பேர் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விசேடமாக தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள மினுவாங்கொட, கம்பஹா, கட்டுநாயக்க மற்றும் குளியாப்பிட்டிய ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர். குளியாப்பிட்டிய பகுதியில் திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டவர்களில் சிலருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. இதனூடாக, இந்நாட்களில் மினுவாங்கொட கொத்தணியோடு தொடர்புடையவர்களுக்கு மேலதிகமாக ஏனைய தொடர்பாளர்கள், அடையாளம் காணப்படுவது, வெவ்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற திருமண மற்றும் இதர நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களே என்பது புலப்படுகின்றது.

ஆகவே, இயலுமான வரை பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்குமாறு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார். (நி-7)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சுவிஸில் வேலை செய்கின்றார் (PR இல்லை)<br>எதிர்பார்ப்பு: ஐரோப்பிய நாட்டு பெண்<br>தொ.இ: B/8961 | பிறப்பு: 1981 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 25 செவ் 5 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்:க.பொ.த.சா/த. தையல் வேலை<br>எதிர்பார்ப்பு: திருமணமாகி ஒரு ஆண் பிள்ளை உண்டு. கணவன் இல்லை<br>தொ.இ: G/1298 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: சூரி.செவ் 2 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Eng. Network Engineer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: B/8962 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 30 1/2 செவ் 10 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோக மணமகன்<br>தொ.இ: G/1302 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 18 செவ் 9 இல்<br>உயரம்: 5 1/2<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் நிரந்தர தொழில்<br>எதிர்பார்ப்பு: தகுந்த பெண்<br>தொ.இ: B/8971 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 25 செவ் 11 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் துறை உத்தியோகத்தர்<br>தொ.இ: G/1303 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தற்சமயம் மலேசியாவில் வசிக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/8974 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 34 1/4 செவ் 4 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Doctor<br>தொ.இ: G/1304 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

### வணிகத்தில் மூன்றாம் தேர்வு (வெளிவாரி) - 2017
### முதலாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சையானது ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி நவம்பர் மாதம் வரை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டையினை 27.10.2020 ஆம் திகதியிலிருந்து 30.10.2020 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ள முடியும்.

**பதிவாளர்.** (C-556)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2018

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 10.11.2020 (செவ்வாய்க்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த்தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

**மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.**

**பதிவாளர்.** (C-057)

# வைத்தியசாலை மனித கழிவுகளை மயானத்தில் கொட்ட மக்கள் எதிர்ப்பு

(குருமன்காடு)

வவுனியா, இராசேந்திரம் குளம் பகுதியில் உள்ள மயானத்தில் வைத்தியசாலை மனிதக் கழிவுகள் கொட்டப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைந்த போது பொலிஸார் ஆர்ப்பாட்டம் செய்ய தடை விதித்தனர்.

வவுனியா, இராசேந்திர குளம் பகுதியில் மக்கள் குடிமனைகளையண்டியதாக காணப்படும் மயானத்தில் வவுனியா வைத்தியசாலையால் சத்திரசிகிச்சை மற்றும் உடல் கூற்று பிரேத பரிசோதனைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளின் போது பெறப்படும் கழிவுகள் கொட்டப்படுவதால் தமக்கு பாதிப்பு ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பாதுகாப்பற்ற முறையில் கழிவுகள் கொட்டப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க இராசேந்திரம் குளம் மயானம் முன்பாக கூடிய போது அவ்விடத்திற்கு வருகை தந்த வவுனியா மற்றும் நெளுக்குளம் பொலிஸார் கொவிட் - 19 அச்சுறுத்தல் காரணமாக ஆர்ப்பாட்டம் செய்ய முடியாது என தடை விதித்தனர்.

இந்நிலையில், அவ்விடத்திற்கு வந்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் விக்டர்ராஜ் இப் பிரச்சினை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் நந்தகுமார் ஆகியோருடன் தொலைபேசியில் உரையாடினார்.

இது தொடர்பில் கவனம் செலுத்துவதாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வழங்கிய உறுதிமொழியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (5-4-250)

# முல்லைத்தீவில் மழை



(பனிக்கன்குளம்)

நீண்ட நாட்களின் பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவு காடுகள் அழிக்கப்படுவதால் உரிய காலங்களில் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளதால் மழையை நம்பி பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகிறது.

எனவே நீண்ட நாட்களின் பின் பெய்த மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (5-2-281)

# குழுக்களுக்கிடையிலான மோதல் தடயப்பொருட்களை கைப்பற்றிய பொலிஸார்


(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரு குழுக்களிடையே மோதல் இடம் பெற்றது.

இம் மோதலில் 9 பேர் காயமடைந்தனர். அவர்களில் 7 பேர் கிளிநொச்சி வைத்திய சாலையிலும், மற்றைய இரு வரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் 4 மோட்டார் சைக்கிள்கள், சிம் அட்டைகள் அடையாள அட்டை என்பனவற்றை மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி ஹேரத் தெரிவித்தார். (5-4-316)

# மன்னாரில் விபத்து மூவர் படுகாயம்



(மன்னார்)


மன்னார் பஸார் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உட்பட மூன்று பேர் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதான பாலத்தினூடாக மன்னார் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களும், மன்னார் பஸார் பகுதியூடாக பயணித்த பொலிஸாரின் வாகனமும் மோதியே விபத்து இடம் பெற்றது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரு சிறுமி உட்பட மூவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ் விபத்து தொடர்பாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் வீதிப் போக்குவரத்து பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(5-4-285)

# டிப்பர் வாகனங்கள் மோதி விபத்து படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில்



(வவுனியா)


வவுனியா, ஈரப்பெரியகுளம் ஏ9 வீதியில் இரு டிப்பர் வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தி நடவடிக்காக மதவாச்சியில் இருந்து வவுனியா நோக்கி கல், மண் என்பவற்றை ஏற்றிச்சென்ற இரு டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டது.

இதில் டிப்பர் வாகன சாரதி மற்றும் நடத்துநர் ஆகிய இருவரும் படுகாய மடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் ஈரப்பெரியகுளம் போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-4-250)

# சுகாதார அமைச்சரிடம் அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிலவுகின்ற வைத்தியர் பற்றாக்குறையை நீக்கி வைத்தியசாலையின் முழுமையான செயற்பாட்டிற்கு வழியேற்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சுகாதார தரப்பினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீதரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே கடற்றொழில் அமைச்சர் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 60 வைத்தியர்களுக்கான தேவை காணப்படுகின்ற நிலையில் 24 வைத்தியர்கள் மாத்திரமே தற்போது கடமையாற்றி வருகின்றமையினால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக குறித்த வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், குறித்த விடயம் தொடர்பாக விரைவான நட வடிக்கையை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் காணப்படுகின்ற விபத்து மற்றும் அவசர சேவை அலகு ஒன்றிற்கான அவசியத்தை சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு தெளிவுபடுத்திய அமைச்சர் குறித்த அலகை முழுமைப்படுத்துவதற்கு சுமார் ஆயிரத்து 185 மில்லியன் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவற்றை பெற்றுக் கொள்ளக்கூடிய வழிவகைகள் தொடர்பாகவும் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4)

# 6 மில்லியனில் முகமாலையில் நூலகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் நடை பெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறி இருபது ஆண்டுகளுக்கு மேலாகின்றது .மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் ரூபாய் ஆறு மில்லியன் சபை நிதியில் குறித்த நூலகம் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

## இராசிபலன்

21.10.2020
ஐப்பசி 05, புதன்கிழமை,
பஞ்சமி பிற்பகல் 3.23 மணிவரை
கேட்டை முற்பகல் 8.31 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம் - கார்த்திகை

வளவன்

**மேஷம்** — வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** — குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டி நாள்.

**மிதுனம்** — நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருமானம் திருப்திதரும்.

**கடகம்** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்** — அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** — இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், கடன் சுமை குறையும் நாள்.

**துலாம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தேக நலனில் அக்கறை காட்டும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** — வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், அனைத்திலும் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு** — சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மகரம்** — வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** — செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மீனம்** — மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

நீ பந்தாக இருந்தால் கடலைக்கூட
உன்னால் நீந்திவர முடியும்.

# கைது செய்யப்பட்ட றிசாத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு

(கொழும்பு)

நீர்கொழும்பு பல்லன்சேன பிரதேசத்தில் இளம் குற்றவாளிகளை தடுத்து வைக்கும் நிலையத்திற்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன், அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையம் தற்போது தனிமைப்படுத்தல் நிலையமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அதேவேளை தன்னை கைது செய்வதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி றிசாத் பதியுதீன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரீட் மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டதுடன் அதனை நவம்பர் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆறு நாட்களாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனை குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் அதிகாலை தெகிவளையில்



உள்ள தொடர்மாடி வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இலங்கை - தென்கொரிய பிரதமர்கள் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் தென்கொரிய பிரதமர் சுங் சைகியுன் ஆகியோரிடையே தொலைபேசி மூலமான கலந்துரையாடல் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்தல், கல்வி, முதலீடு மற்றும் சுற்றுலாத் துறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

தென்கொரிய பிரதமர் சுங் சை-கியுன் நேற்றுக் காலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு பேசியதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது அண்மையில்முடிவடைந்த பொதுத் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதற்கு தென்கொரிய பிரதமர் வாழ்த்துத் தெரிவித்தார். அத்துடன், இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கை யுடன் தொடர்ந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாக பிரதமர் சுங் கூறினார்.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் ஊடாக இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்துக்கு தென்கொரிய ஏற்கனவே உதவிகளை வழங்கியுள்ளது. இந்நிலையில் பல்கலைக்கழகத்திற்கான மேலதிக தொழில்நுட்ப உதவிகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

அத்துடன், முதலீடு மற்றும் சுற்றுலாத் துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்புக் குறித்தும் பேசப்பட்டது.

தொற்று நோய் நெருக்கடி இயல்புக்கு வந்ததும் இலங்கையில் முதலீடு செய்ய தென்கொரியர்களை ஊக்குவிக்குமாறு இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார்.

அத்துடன், கொவிட் -19 நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் இலங்கைக்கு வருகை தருமாறு தென்கொரிய பிரதமருக்கு மகிந்த ராஜபக்ஷ இதன்போது அழைப்பு விடுத்தார். (நி-7)

## தடை

(கொழும்பு)

ஒற்றைப்பயன்பாட்டு பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் ஆகியவற்றை 2021 ஜனவரி 1 முதல் தடை செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது. (ஜ-4)

## ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 388 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 388 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் 19 பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை 46 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கம்பஹாவில் கண்டிப்பான ஊரடங்கு

(கொழும்பு)

பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப்பட்டுள்ள கம்பஹா மற்றும் நீர்கொழும்பில் உள்ள 19 பகுதிகளில் நேற்று முதல் கண்டிப்பான ஊரடங்குச் சட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

அதன்படி, பிரதான சாலைகளின் ஓரங்களில் வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படாது அத்துடன்பயணிகளை ஏற்றவும் இறக்கவும் பேருந்துகள் அனுமதிக்கப்படாது என்றும் கண்டி-கொழும்பு பிரதான சாலையில் உள்ள கம்பஹா, யக்கல மற்றும் நிட்டம்புவ பொலிஸ் பிரிவு பகுதிகளிலும் நீர்கொழும்பு பிரதான சாலையில் உள்ள கந்தானை, சீதுவ மற்றும் ஜா-எல பகுதிகளிலும் இந்தச் சட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப்பட்ட பகுதிகள் வழியாக நீண்ட தூர பேருந்துகள் செல்ல அனுமதிக்கப்படும். இந்த நிலையில் பரீட்சை



க்கு தோற்றிவரும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இந்தக்கட்டுப்பாடுகள் பொருந்தாது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

15


**கலாநிதி க.தவலிங்கம்**

தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




12) இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற விருப்புக்களின் எண்ணிக்கையை உரிய வேட்பாளரின் இலக்கத்திற்குக் கீழே குறிப்பிடப்படுவதோடு விருப்பு எண்ணிக்கையை செங்குத்தாகவும் குறுக்காகவும் கூட்டுவதன் மூலம் ஒப்புநோக்கல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கை 50, 100, 150 என்றவாறு சமப்படுகின்றனவாவெனப் பரீட்சித்து விருப்புக்கள் அடையாளமிடப்பட்டதன் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

13) விருப்புக்களை அடையாளமிடல் விருப்பு 1, விருப்பு 2, விருப்பு 3 தனித்தனியாக ஒப்புநோக்கல் பத்திரங்களில் அடையாளமிடப் படும்.

14) இவ்வொப்பு நோக்கல் பத்திரத்தின் மிகவும் கீழ்ப்பகுதியில் காணப்படும் 1-50 வரையான இலக்கங்கள் வாக்குச்சீட்டுக் கட்டில் உள்ள 50 வாக்குச் சீட்டை கணக்கிடுவதற்காக உள்ளவை. அதற்கிணங்க ஒவ்வொரு வாக்குச்சீட்டின் விருப்புக்களையும் பரீட்சித்து வேட்பாளரின் கூட்டினுள் குறிக்க முன்னர் உரிய வாக்குச் சீட்டிற்கான இலக்கத்தை கோடொன்றைக் கீறி வெட்டிவிட வேண்டும்.

15) வாக்குச் சீட்டின் விருப்புக்கள் குறிக்கப்பட்டுள்ள விதத்திற்கு இணங்க ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட விருப்புக்களின் தொகையை உரிய வேட்பாளரின் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப் படும்.

(படங்கள் **10a, 10b** மற்றும் 10 **c** இல் வேட்பாளர்களின் இலக்கங்கள் ஒன்று தொடக்கம் 10 வரையுள்ளது. இவ்விலக்கங்கள் மெல்லிய கரும் நிறந்தீட்டிக் காட்டப்பட்டுள்ளது. அப்படங்களில் விருப்புக்களின் தொகை சரிந்த இலக்கத்தில் காட்டப்பட்டுள்ளது).


16) குறிப்பு- இந்த வாக்கெடுப்பின் போது ஒரு வேட்பாளருக்கு ஒரு விருப்பு என்ற விகிதத்தில் ஆகக் கூடியது மூன்று வேட்பாளர்களுக்கு மூன்று விருப்புக்களை அடையாளமிட முடியும்.

17) ஒப்புநோக்கல் பத்திரத்தில் ஒரு வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டுள்ள கூட்டினுள் விருப்புக்களை அடையாளமிடுவதற்காக இடமிருந்து வலமாக 10 கூடுகளும் மேலிருந்து கீழாக 5 கூடுகளுமாக 50 கூடுகள் உள்ளன.

ஒப்புநோக்கல் படிவம் (CE/CO/PR/1)

2 விருப்புக்களுடன் கூடிய 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டொன்றில் உள்ள விருப்பைப் பதிதல்


மொத்த விருப்பு = 2 X 50 = 100 (படம் 10b)




ஒப்புநோக்கல் படிவம் (CE/CO/PR/1)

ஒருவருக்கு மட்டும் அடையாளமிடப்பட்ட 50 வாக்குச் சீட்டுக் கட்டு விருப்பைப் பதிதல்


மொத்த விருப்பு = 1x 50 = 50 (படம் 10a)




ஒப்புநோக்கல் பத்திரம் (CE/CO/PR/1)

3 விருப்புக்களுடன் கூடிய 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டொன்றில் உள்ள விருப்பைப் பதிதல்

மொத்த விருப்பு = 3 x 50 = 150 (படம் 10c)




(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## முசுட்டையும், பொன்முசுட்டை அல்லது மலைதாங்கியும்


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**முசுட்டை**
Botanical Name - Rivea ornata
Family - Convolvulaceae

**பொன்முசுட்டை**
Botanical Name - Cissampelos pareira
Family - Menispermaceae

இரண்டும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவை. இரண்டும் ஏறு கொடித் தாவரங்களாகும். ஆனாலும் வெவ்வேறு மருத்துவப் பண்புகளைக் கொண்டவை. பொன் முசுட்டையின் இலைகள் தனியிலைகள், மாற்றிலை அடுக்கம்.


முசுட்டை

இலைக் கோணத்திலுள்ள ரெசிம் மஞ்சரி. ஒருபாலான மலர்கள் சிறியவை. ஒழுங்கான மலர்கள் ஆரைச் சமச்சீரான மலர்களாகவும் இருக்கும்.

முசுட்டையும் ஏறு கொடித் தாவரமாகும். தனியிலைகள் தடிப்பாக இருக்கும். மாற்றிலை அடுக்கம் கொண்டவை. இருபாலான மலர்கள், ஒழுங்கான மலர். ஆரைச் சமச்சீரான மலர்கள். பூவடிச் செதில், பூக்காம்புச் செதில்களுடைய காம்புடைய மலர்கள். மலர்கள் வெண்ணிறமானது. நறுமண முள்ளது. சில சமயங்களில் பருத்த ஏறுகொடியாகவும் இருக்கும்.

முசுட்டையை கீரையாகவோ வறுத்தோ அல்லது பச்சடி செய்தோ பயன்படுத்தலாம். வாத நோய்கள், வெள்ளை சாய்தல், தோல்வியாதிகளுக்கு சிறந்தனவாகும்.

**100 கிராம் முசுட்டையிலுள்ள சத்துக்கள்**

சக்தி 28 கலோரி, புரதம் 8.0 மி.கிராம், கொழுப்பு 0.4 மி.கிராம், கல்சியம் 166 மி.கிராம், இரும்பு 2.9 மி. கிராம், βகரோட்டின் 3600 மை.கிராம், தயமின் 9 மை.கிராம், ரைபோபிளேவின் 9 மை.கிராம் நியோசின் 0.8 மி.கிராம், விற்றமின் சி 70 மி.கிராம்.

முசுட்டையின் தண்டு, இலைகளை சிறிது சிறிதாக அரிந்து கழுவி ஒரு மண்சட்டியில் போட்டு 4 பங்கு நீரிலிட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 60 மில்லி குடிநீர் அளவு காலை, மாலை குடிக்க வெள்ளை சாய்தல், ஆறாத புண்கள், சிரங்கு முதலியன குணமாகும்.

முசுட்டையின் தண்டு, இலைகளை அரைத்து நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி சொறி, சிரங்கு முதலியவற்றிற்கு பூசிவர குணமாகும்.

இதன் வேர், இலை, தண்டு முதலியவற்றை குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை குடிக்க கொடுக்க மூல நோய் குணமாகும்.

**முசுட்டைப் பஜ்ஜி**


முசுட்டை இலைகளை சேகரித்து அவற்றை உப்பு நீரில் நன்கு அலசி அதனைக் கடலைமாவில் தோய்த்து தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து உடல் ஆரோக்கியமும் விற்றமின்களும் கொண்ட சத்துணவாகவும் மாலை நேர சிற்றுண்டியாகவும் இதனை பயன்படுத்தலாம்.

இது இதய நோய்களுக்கும் வாதநோய்களுக்கும் சிறந்தது. அத்துடன் உடல் வலிகளையும் போக்கும்.

**முசுட்டை இலை சூப்**

முசுட்டை இலை 1கப், பெருஞ்சீரகம் 1 தேக்கரண்டி, தேங்காய்த் துருவல் 1/2 மூடி, மல்லித்தூள் 2 தேக்கரண்டி, சின்ன வெங்காயம் பொடியாக நறுக்கியது, மஞ்சள் பொடி 1/2 தேக்கரண்டி,வெந்தயம் 1 தேக்கரண்டி, மிளகு 1/2 தேக்கரண்டி, நல்லெண்ணெய் 3 தேக்கரண்டி, கடலைப் பருப்பு 4 தேக்கரண்டி, பச்சை மிளகாய் தேவையான அளவு.

முசுட்டை இலையை அலசி கழனி (சிவத்தப் பச்சரிசி கழுவிய நீர்) நீரை கொதிக்கவிட்டு கீரையை அதில் போட்டு வேகவிட வேண்டும். தேங்காய்த் துருவல், பெருஞ்சீரகம் இவற்றை அரைத்து கரைத்து ஊற்ற வேண்டும்.


பொன் முசுட்டை

உப்பை போட வேண்டும். வாணலியில் எண்ணெய் ஊற்றி பெருஞ்சீரக தூள் போட்டு சிவந்ததும் வெங்காயம் பாதி அளவு போட்டு வதக்கி சூப்பில் போடவேண்டும். கடலைப் பருப்பை எண்ணெயில் வறுத்து வைக்க வேண்டும். வெங்காயம், மிளகு இவற்றையும் இரண்டு பச்சை மிளகாய் வைத்து தட்டி சூப்பில் போட்டு கொதிக்க வைத்து கொதி வந்ததும் இறக்கும் தருணம் வெந்தயம் போட்டு கடலைப்பருப்பு போட்டு இறக்கிவிட வேண்டும்.

உடல் குளிர்ச்சியடையும். கண்களுக்கு குளிர்ச்சி, தலைமுடி வளரும். இரும்புச்சத்து நிறைந்ததாக இருக்கும். வெள்ளை சாய்தலுக்கு நல்லது. எளிதில் ஜீரணமாகும். மலத்தை இளக்கி வெளியேற்றும்.

**முசுட்டைத் துவையல்**

முசுட்டை இலை 1 கப், உளுத்தம் பருப்பு 50 கிராம், எலுமிச்சம்பழம்-1, உப்பு-தேவையான அளவு, பெருங்காயம்-1 துண்டு, காய்ந்த மிளகாய் -4, தேங்காய் துருவல்-1/4 மூடி, பசுநெய்-3 தேக்கர ண்டி வாணலியில் நெய்யை விட்டு மிளகாய், உளுந்து, பெருங்காயம் இவற்றை வறுத்த உப்பு, புளியை சுட்டு வைத்து அரைக்கவும் .முசுட்டையை வதக்கி நெய்யில் இதையும் அரைக்கவும்.

இத் துவையலை சாதத்தில் பிசைந்து சாப்பிட்டு வர குருதியை சுத்தப்படுத்துவதோடு தேகத்தைப் பலப்படுத்தும்.

முசுட்டை இலை, துளசி, மிளகு என்பவற்றை எடுத்து அவற்றை அம்மியில் போட்டு நன்கு அரைத்து 130 மி.கிராம் அளவு மாத்திரைகளாக உருட்டி எடுத்து வைக்கவும்.

தினமும் இரண்டு மாத்திரைகள் வீதம் உண்டுவர தேகபலம் உண்டாகி களைப்பு நீங்கி உடல் ஆரோக்கியமடையும்.

மலை தாங்கி /பொன் முசுட்டை என அழைக்கப்படும் மூலிகை வெற்பேந்தி எனவும் அழைக்கப்படும். இம் மூலிகையானது கொடிய காய்ச்சல் வகைகளுக்கு சிறந்த மூலிகையாகும்.

அத்துடன் உடலை கல் போலாக்கி அழியாதபடி நிலைக்கச் செய்யக் கூடியது பொன் முசுட்டையாகும்.

பொன் முசுட்டை வேரால் கபப் பிணிகள், வலி, நஞ்சு, கழிச்சல், சிரங்கு போன்ற நோய்களும் தீரும்.

ஐயநஞ் சூதை பித்தத்
திக்கரைவு மாபிரமி
வெய்யசுரம் பேதி விரணமெல்லாம் -வையம் விடுத்
தெட்டத் திருப்பிவிடும் என்பை ஊனாக்குமன்றி
வட்டத் திருப்பிவிடுமா.

என்புருக்கி நோய்க்கும் சிறந்த மூலிகையாகும். பொன்முசுட்டையை வட்டத்திருப்பி எனவும் கூறுவர். பொன்முசுட்டை இலையை எண்ணெய் விட்டு வதக்கி கட்டிகள் மீது வைத்துக் கட்ட அவை எளிதில் பழுத்து உடையும்.

வட்டத்திருப்பி வேரை வெந்நீரில் ஊறவிட்டு 60 மில்லி அளவு 3 நேரம் தினமும் கொடுக்க அது வியர்வையை உண்டு பண்ணி காய்ச்சலையும் தணிக்கும்.

வயிற்றுப் புழுக்களை வெளியேற்ற பச்சை வேரைப் பிழிந்த சாறு 30 மில்லி காலை, மாலை 3 நாட்கள் கொடுக்கலாம்.

பொன் முசுட்டை வேரை சிறுசிறு துண்டுகளாக வெட்டி குடிநீர் காய்ச்சி வடித்து 100 மில்லி காலை, மாலை குடிக்க சீல்வாயு, வெள்ளை சாய்தல் குறையும். இது சிறுநீரை பெருக்கி உள்ள மூலை ஆற்றக் கூடியது.

இரண்டு மூலிகைகளும் வட மாகாணத்தில் பரம்பி வளரக் கூடியது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

# பாரதம்

## நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பார்வை இழக்கும் அபாயம்-ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**(டில்லி)**

**நீரிழிவு நோய் காரணமாக இந்தியாவில் 13 கோடியே 76 இலட்சம் பேர், பார்வை இழப்பை எதிர்நோக்கி உள்ளதாக அண்மைய ஆய்வு முடிவுகள் தெரிவித்து உள்ளன.**

பார்வை இழப்பு பிரச்சினை என்பது பொதுவாக வயது முதிர்வு மற்றும் நீரிழிவு நோய்களால் ஏற்படுகிறது. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 40 வயதுக்கு பிறகு மெல்ல, மெல்ல பார்வை பிரச்சினைகளால் பாதிக்கப்படக்கூடும் என்று ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

இந்த நிலையில் பார்வை இழப்பு பற்றி பார்வை இழப்பு நிபுணர் குழு மற்றும் பார்வை இழப்பை தடுக்கும் சர்வதேச அமைப்பு ஆகியவை சார்பில் அண்மையில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

உலகம் முழுவதும் ஏழெட்டு மாதங்கள் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டு உள்ளன.

இதன்படி உலகம் முழுவதும் 50 கோடியே 70 இலட்சம் பேர், பார்வை இழப்பை எதிர்நோக்கி இருப்பதாக கண்டறியப்பட்டு உள்ளது. இந்தியாவில் 13 கோடியே 76 இலட்சம் பேர் பார்வை இழப்பை எதிர்நோக்கி இருக்கிறார்கள். இதில் 78 சதவீதம் பேர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பார்வை இழப்புக்கு முக்கிய காரணம் நீரிழிவு நோய் தான் என்று அந்த அறிக்கை கூறுகிறது. (நி)

## கொரோனா ...
## பார்வையை இ...

(டில்லி)

கொரோனா பாதிப்பால் சி...
நரம்பு பாதிக்கப்பட்டு பார்வை...
தாக டில்லி எய்ம்ஸ் வைத்...
துள்ளது.

டில்லி அகில இந்திய ...
நிறுவனம் (எய்ம்ஸ்) கெ...
நோயாளியான சிறுமி (வ...
மூளை நரம்பு பாதிப்பைத்...
என்றும் இது அவரது பார்வை...
எனவும் கூறி உள்ளது.

11 வயது சிறுமி ஒருவர் ...
தொற்றால் தூண்டப்பட்ட அக்...
நோய்க்குறி (ஏடிஎஸ்) இ...
பிடித்தோம். குழந்தை வயதி...
முதல் பக்கவிளைவு இது...
வருகின்றது.

## கொரோனா சிகிச்சை விடுதிகளில் ஏசி பயன்படுத்துவது ஆபத்து

### எச்சரிக்கும் ஆராய்ச்சியாளர்கள்

(டில்லி)

கொரோனா தொற்று நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவுகளில் வளிச் சீராக்கி (Air-Conditioner) பயன்படுத்தப்படுவதால் அங்கு கடமையில் இருக்கும் வைத்தியர்கள் அதிகம் பாதிக்கப்படக்கூடிய அபாயம் உள்ளதாக பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தின் ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வைத்தியர்கள் தொற்றுக்குள்ளாகும் அபாயத்தைக் குறைக்க வளிச் சீராக்கி பயன்பாட்டைக் கைவிட வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

உலகெங்கிலும் முன்னணியில் உள்ள சுகாதார ஊழியர்கள் கொரோனா வைரஸ் நெருக்கடியின் அதிக சுமைகளைச் சந்தித்து வருகின்றனர்.

கொரோனாவால் உலகின் இரண்டாவது மிக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்துள்ள இந்தியாவில் கொரோனா தொற்றுக்குள்ளாகி 500 இற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் உயிரிழந்துள்ளனர்.

வெளிப்புற காற்றின் பயன்பாட்டை அதிகரிப்பது உட்புறங்களில் கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தைக் குறைக்கும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் பயன்படுத்தப்படும் வளிச்சீராக்கி அமைப்புகளினால் வைத்தியர்கள் மற்றும் செவிலியர்கள் அதிகளவு தொற்றுக்குள்ளாகி உயிரிழந்திருக்கலாம் என பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கொரோனா நோயாளி... ஏற்றிச் செல்லும் பெண்...

(மும்பை)

இந்தியா கொரோனா வைரஸ் தொற்றினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இரண்டாவது இடத்திலுள்ளது.

அந்நாட்டில் நாளாந்தம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்புகளும் அதிகரித்து செல்கின்றன.

இந்நிலையில் கொரோனா வைரஸ் நோயாளர்களை பாடசாலை பேருந்தில் நீலம் சிங் என்ற பெண் வைத்தியசாலைக்கு ஏற்றி செல்கின்றார்.



இதனால் அங்கு நோயாளர் காவு வண்டிகள் பற்றாக் குறை ஏற்பட்டது. நோயாளிகளை வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்வதற்கு பாடசாலை பேரு...

ந்துகளை...
கின்றன...
கொரோ...
பட்ட மிக...
ளில் மும்...

## இப்படியும் ஒரு விளம்பரம்

### உங்கள் பிள்ளைக்கு எங்கள் பெயர் வையுங்கள் 18 ஆண்டுகள் வைஃபை இலவசம்

(சுவிட்சர்லாந்து)

எங்கள் பிராண்ட் பெயரை உங்கள் குழந்தைக்கு வைத்தால் 18 ஆண்டு வைஃபை (WIFI) இலவசம் என சுவிட்சர்லாந்து நிறுவனம் அறிவித்துள்ளது.

இலவச வைஃபை பெற நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? உங்கள் குழந்தைக்கு எங்கள் நிறுவனத்தின் பெயரை வைத்தால் போதும் என சுவிட்சர்லாந்து நிறுவனம் விளம்பரம் செய்தது.

சுவிட்சர்லாந்தை சேர்ந்த ட்விஃபி என்ற நிறுவனம் தங்கள் பிராண்ட் பெயரை மக்களிடம் கொண்டு செல்ல வித்தியாசமான முறையில் விளம்பரம் செய்தது.

அந்த நிறுவனம் அண்மையில் பேஸ்புக்கில் ஒரு விளம்பரம் வெளியிட்டது. அதில், உங்கள் குழந்தைகளுக்கு எங்கள் பிராண்ட் பெயரை வைத்தால் 18 ஆண்டு வரை வைஃபை இலவசம் என அறிவித்தது.

மேலும், உங்கள் குழந்தையின் பிறப்பு சான்றிதழை பதிவேற்றவும். உரிய சரிபார்ப்பிற்குப் பிறகு ட்விஃபி நிறுவனம் உங்களுக்கு 18 வருட இலவச வைஃபை சேவையை வழங்கும் என்றது. இந்த விளம்பரம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

இந்த விளம்பரத்தைப் பார்த்த ஒரு தம்பதியினர் தங்களது பெண் குழந்தைக்கு ட்விஃபியா என பெயரிட்டனர். இதன்மூலம் அந்த பெண் குழந்தைக்கு 18 ஆண்டுகள் வரை வைஃபை இலவசமாக கிடைக்க உள்ளது என அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். (நி)

## இந்தியாவில் கொரோனா... இதுவரை யாரும் உயிரிழக்காத...

(மிசோரம்)

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலகில் அதிகம் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவில் ஒரு மாநிலத்தில் மட்டும் இதுவரை யாரும் உயிரிழக்கவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மிசோரமில் கொரோனாத் தொற்றால் இதுவரை யாரும் உயிரிழக்கவில்லை.

குறித்த மாநிலத்தில் இதுவரை 2 ஆயிரத்து 253 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 2 ஆயிரத்து 253 பேர் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளதுடன் குணமடைந்தோர் விகிதம் 95.34% ஆக உள்ளது.

தற்போது கொரோனா தொற்றுக்குள்ளான 105 பேர் மாத்திரம் சிகிச்சை பெற்று வருவதகாவும் கொரோனா தொற்றால் இதுவரை யாரும் உயிரிழக்கவில்லை எனவும் மிசோரம் மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு ஒன்பது மாதங்கள் ஆகின்ற நிலையில், அ...
பேருக்கு...
உறுதி...
காரண...
மேற்பட்...
யுள்ள...
கது.

## கெ...

(ஜெ...
கொ...
க்கு சா...
ஒன்று ...
அதனை...
2021 ஆ...
உலகெ...

# வெளிநாடு

## னா பாதிப்பால் ...யை இழந்த சிறுமி

...ாதிப்பால் சிறுமி ஒருவர் மூளை ...ட்டு பார்வையை இழந்து உள்ள ...ஸ் வைத்தியசாலை தெரிவித்...

... இந்திய மருத்துவ அறிவியல் ...ம்ஸ்) கொரோனா வைரஸ் சிறுமி (வயது-11) ஒருவருக்கு ...ாதிப்பைத் ஏற்பட்டு உள்ளது ...ரது பார்வை மங்கலாகிவிட்டது ...ள்ளது.

...மி ஒருவர் கொரோனா நோய்த் ...ப்பட்ட அக்யூட் டெமிலினேட்டிங் ...டிஎஸ்) இருப்பதைக் கண்டு ...தை வயதினரிடையே பதிவான ...ளவு இதுவாகும் எனத் தெரிய (நி)

# கைதிகளை சித்திரவதைப்படுத்தும் வடகொரியா

## மனித உரிமைகள் குழு தெரிவிப்பு

**(பியாங்யாங்)**

**வாக்குமூலம் பெற வடகொரியா தங்களது கைதிகளை சித்திரவதை மற்றும் அவமானத்திற்கு உட்படுத்துகிறது என மனித உரிமைகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம், வடகொரியாவின் தடுப்புக்காவல் அமைப்பு, மக்களை ஒரு விலங்கை விடக் மதிப்பு குறைவாக நடத்துவதாக கூறுகின்றது.

வடகொரிய கைதிகளிடம் மேற்கொண்ட நேர்காணல்களுக்கு பிறகே இந்த தகவலினை மனித உரிமைகள் குழு வெளியிட்டுள்ளது.

கைதிகளில் சிலர் ஒரு நாளைக்கு 16 மணிநேரம் வரை முழங்கால்களிலோ அல்லது தங்கள் கால்கள் குறுக்கே இருக்கும் படி, தரையில் உட்கார வேண்டிய கட்டாயத்தில் இருந்ததாகக் கூறினர்.

தடுப்புக்காவல் நிலையங்களில் மனிதாபிமானமற்ற நிலைமைகள் என்று அழைக்கப்படுவது பெரும்பாலும் சித்திரவதைக்குரியது என அதிர்ச்சியூட்டும் தரவுகள் தெரிவிக்கின்றன.

இரகசியமான நாடாக பார்க்கப்படும் வடகொரியாவில், குற்றவியல் நீதி முறைமை பற்றி மிகக் குறைவாகவே அறியப்படுகிறது. ஆனால் அங்கு, பரவலான உரிமை மீறல்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற விமர்சகர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (நி)



## ...ளிகளை ...ண்மணி



...ந்துகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மிக மோசமான நகரங்களில் மும்பை ஒன்றாகும். (நி)

# ஆப்கானிஸ்தானில் கார்க்குண்டு வெடிப்பில் 15 பேர் பலி, 150 பேர் படுகாயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த கார்க்குண்டு வெடிப்பில் சிக்கி 15 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக்கும் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே 19 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக இருதரப்பும் கட்டார் நாட்டின் தலைநகர் டோஹாவில் கடந்த ஒரு மாத காலமாக அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.

ஆனாலும் இந்த பேச்சுவார்த்தையில் இரு தரப்புக்கும் இடையில் குறிப்பிடத்தக்க உடன்படிக்கை எதுவும் இதுவரை ஏற்படவில்லை. இந்த சூழலில் கடந்த சில வாரங்களாக ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதியில் கோர் மாகாணத்தின் தலைநகர் சாக்சரணில் உள்ள பொலிஸ் தலைமையகம் முன்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை நிறுத்தி வெடிக்க செய்தனர்.

பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித்து சிதறியதில் அந்த பகுதியே அதிர்ந்தது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் அனைத்தும் தீக்கிரையாகின. இந்த குண்டு வெடிப்பில் சிக்கி 15 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (நி)

## ...னாவால் ...காத மாநிலம்

...யில், அங்கு 75 இலட்சம் பேருக்கும் மேல் நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்று காரணமாக ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கொரோனா தடுப்பூசியை எதிர்பார்த்து சிரிஞ்சுகளை தயார் செய்யும் ஐ.நா.!

(ஜெனிவா)

கொரோனாத் தொற்று நோய்க்கு சாத்தியமான தடுப்பூசி ஒன்று கண்டறியப்பட்டால் அதனை வழங்க ஏதுவாக 2021 ஆம் ஆண்டு இறுதிக்குள் உலகெங்கும் ஒரு பில்லியன் சிரிஞ்சுகளை இருப்பு வைக்க ஐக்கிய நாடுகள் சபை திட்டமிட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் 520 மில்லியன் சிரிஞ்சுகளை உலகெங்கும் சேமிப்பகங்களில் இருப்பு வைக்க முடியும் என ஐ.நா. சிறுவர் பாது காப்பு நிதியம் (UNICEF) கணிப்பிட்டுள்ளது. 2021 இறுதிக்குள் இவை ஒரு பில்லியன் இலக்கை அடையும்.

உலகெங்கும் தற்போது 42 கொரோனா தடுப்பூசிகள் மனிதப் பரிசோதனைக் கட்டத்தில் உள்ளன. அதில் 10 மருந்துகள் கிட்டத்தட்ட இறுதிக்கட்ட சோதனையில் உள்ளன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உலகெங்கும் இதுவரை 40 மில்லியன் மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகி உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

1.1 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் உயிரிழந்துள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கல்முனை)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 62 பேர் தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களில் 8 பேர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றின் நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் வேறு பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்கள் நீதிமன்றுக்கு அழைத்து வரப்படாத நிலையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்தவர்கள் மாத்திரமே நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸார் சார்பில் சிரேஷ்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகரவும் ஆஜராகியுள்ளார்.

இந்த நிலையிலேயே, குறித்த சந்தேக நபர்கள் தொடர்பான அறிக்கையினை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இது தொடர்பான வழக்கு அடுத்த மாதம் இரண்டாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-7)

# மினுவாங்கொட கொத்தணி என்றழைப்பது ஆபத்தை மட்டுப்படுத்துவது போலுள்ளது

## கரு டுவிட்

(கொழும்பு)



நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில், தற்போதைய பரவலை "மினுவாங்கொட கொத்தணி" என்றோ அல்லது "பிராண்டிக்ஸ் கொத்தணி" என்றோ இனியும் அழைப்பது தவறாகும் என்று குறிப்பிட்டிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, அது வரப்போகின்ற ஆபத்தின் தன்மையைக் குறைத்துக் காண்பிப்பதாகவே அமைகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கரு ஜயசூரிய பதிவொன்றைச் செய்திருக்கின்றார்.

ஏனைய நோய்களைப் போன்று கொவிட் - 19 கொரோனா வைரஸ் தொற்றிடமிருந்த எம்மால் விலகிஓட முடியாது. எனினும் நாட்டை மேலும் பலவீனப்படுத்தக் கூடியவாறான மற்றொரு முடக்கத்தைத் தவிர்ப்பதற்காக, நாமனைவரும் தற்போதைய நிலவரத்துடன் வாழ்வதற்குப் பழகிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தனிமைப்படுத்தல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் விடயங்கள் உயர் முக்கியத்துவத்துடன் பின்பற்றப்பட வேண்டும். அவை பலவீனமானவர்களை அடக்குவதற்கோ அல்லது அவர்களது கருத்துக்களை முடக்குவதற்கோ பயன்படுத்தப்படாமல், அனைவருக்கும் பொதுவானதும் நியாயமானதுமான விதத்தில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று தற்போது நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றார்கள். எனவே அனைவரும் தாம் வைரஸ் தொற்றுக்குள்ளாவதைத் தடுப்பதற்கும் தம்மால் பிறருக்கு வைரஸ் தொற்று ஏற்படாது பாதுகாப்பதற்கும் உரிய அனைத்து முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தற்போதையகொரோனா வைரஸ் பரவலை "மினுவாங்கொட கொத்தணி" என்றோ அல்லது "பிரண்டிக்ஸ் கொத்தணி" என்றோ இனியும் அழைப்பது தவறானது என்பதுடன் அது ஆபத்தின் தன்மையைக் குறைத்துக் காண்பிக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். (நி-7)

# பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள்

(கொழும்பு)

சமூகத்தில் மிகவும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. முதற் சுற்றில் 34,818 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு இலட்சம் தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வறுமையற்ற இலங்கை என்ற எண்ணக்கருவிற்கு ஏற்ப திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். அது பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (நி-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நடப்பது நடக்கட்டும்!

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். சாதாரண ஆள்தான். குதிரை வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான். எலும்பும் தோலுமாக ஒரு குதிரை. ஓட்டையும் உடைசலுமாக ஒரு வண்டி. இதுதான் அவன் சொத்து.இதை வைத்தே அவன் காலம் தள்ளிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவன் அந்த வண்டியிலே எங்கேயோ போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது அந்தக் குதிரை ஒரு இடத்திலே கால் தடுமாறி கீழே விழுந்துவிட்டது. கால் முறிந்து போய்விட்டது. ஊரிலே உள்ளவர்கள் எல்லாம் அவனைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். ஐயோ பாவம்...இப்படி ஆகிவிட்டதே...இனிமேல் எப்படித்தான் பிழைப்பு நடத்தப் போகின்றாயோ...என்று சொல்லி பரிதாபப்பட்டார்கள். ஆனால் இவனோ கொஞ்சம்கூட பதற்றப்படவில்லை. நடக்கின்றது நடக்கட்டும் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்குப் போய்விட்டான். கிராமத்துச் சனங்களுக்கு மிகவும் ஆச்சரியம். இவனுடைய அமைதி–நிதானம்–அலட்டிக்காத தன்மை இதுதான் அவர்கள் ஆச்சரியத்துக்குக் காரணம்.

அவர்கள் என்ன செய்தார்கள். காட்டுக்குப் போய் புதிதாக ஒரு குதிரையைப் பிடித்து கொண்டு வந்து அவனிடம் பரிசாகக் கொடுத்து விட்டார்கள்.

இதை சிலபேர் பார்த்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? நீ கொடுத்து வைத்தவன்–மோசமான குதிரைக்குப் பதிலாக நல்ல குதிரையே உனக்குக் கிடைத்து விட்டதே என்றார்கள். இப்பொழுதும் அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம்... என்று சொல்லிவிட்டுப் பேசாமல் போய் விட்டான்.கொஞ்ச நாளாகிவிட்டது.. என்ன நடந்தது தெரியுமா? காட்டிலேயிருந்து பிடித்துக் கொண்டு வந்த குதிரை ஒரு நாள் காட்டுக்கே ஓடிப் போய்விட்டது. ஐயோ பாவம் நாம் கொடுத்த குதிரையும் அவனை விட்டுவிட்டுப் போய்விட்டதே என்று சனங்க பரிதாபப்பட்டார்கள். இப்பொழுதும் அந்த ஆளு பொறுமையாக நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் என்று சொல்லி விட்டான்.

மறுபடியும் சிறிது நாட்கள் ஆகிவிட்டன.

ஓடிப்போன குதிரை இன்னும் ஒரு ஐந்தாறு குதிரைகளையும் சேர்த்துக் கொண்டு திரும்பி வந்தது. உடனே பார்த்தார்கள் ஊர் மக்கள்.

நீ கொடுத்து வைத்தவன்.. ஐந்தாறு குதிரை சேர்த்து கிடைத்து விட்டதே உனக்கு என்றார்கள். இப்பொழதும் அந்த ஆள் பதற்றப்படவில்லை.. வழக்கமாகச் சொல்வது மாதிரியே சொன்னான். அதன் பின்பு ஒரு நாள். அந்த வண்டிக்காரனின் ஒரே மகன்–அந்த ஐந்தாறு குதிரைகளையும் நன்றாக கவனித்துக் கொண்டிருந்தான். வண்டியிலே பூட்டுவதற்குப் பழக்கிக் கொண்டிருந்த பொழுது ஒரு முரட்டுக் குதிரை கொடுத்த உதையிலே அவன் கால் முறிந்து போய்விட்டது.

ஐயோ உன் பிள்ளைக்கு இப்படி ஆகிவிட்டது என்று ஊர் மக்கள் பரிதாபப்பட்டார்கள்.

அப்பொழுதும் இவன் நடப்பது நடக்கட்டும் என்று சொல்லிவிட்டு மகனை கவனித்துக் கொண்டிருந்தான்.அதற்குப் பின்பு திடீர் என்று ஒரு நாள் அந்த தேசத்திலே போர். அடுத்த தேசத்திலிருந்து படையெடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

வீட்டுக்கு ஒரு ஆள் வரவேண்டும் சண்டை போடுவதற்கு என்று ராஜா உத்தரவு போட்டார். வண்டிக்காரன் பிள்ளைக்கு கால் ஒடிந்ததால் சண்டைக்கு போக வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. அவனுக்கும் வயசானதனால் போக வேண்டிய கட்டாயமில்லை.

இப்பொழுதும் அவனைப் பார்த்து.... நீ மிகவும் கொடுத்து வைத்தவன்.. என்றார்களாம்.

இவனும் வழக்கம் போலவே நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் என்று சொல்லிக் கொண்டு அவன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தானாம்.

இது ஒரு கதை. வீட்டிலே தாத்தாக்கள், பாட்டிகள் சொல்கின்ற கதை. கதை ஒரு மாதிரியாக தெரிந்தாலும் இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு கருத்து...தத்துவம் சொன்னால் வாழ்க்கையிலே சுக துக்கங்களை நாம் சமமாக பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்கிறது தான்.

நடப்பது நடக்கட்டும் என்று சொல்லிக் கொண்டு நம் பாட்டுக்கு பேசாமல் படுத்துத் தூங்கலாம்.. என்று இதற்கு அர்த்தம் செய்துவிடக்கூடாது. ஒரு குதிரைப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது.

ஒருத்தன் ஒரு குதிரை மேலே பணம் கட்டினான். அது ஜெயிக்கவில்லை. பக்கத்திலே இருக்கிறவர் சொன்னாராம்.

நீ பணம் கட்டினாயே. அந்த குதிரை ஓடவே இல்லை...அது பாட்டுக்கு நடந்து போகின்றது பார் என்றாராம். அதற்கு இவன்.. நடப்பது நடக்கட்டும்.. என்றானாம்.

# '20' நிறைவேறுவது நிச்சயம் - பிரதமர் உறுதி

(கொழும்பு) ----------

அரசியலமைப்பின் 20ஆவது திருத் தச் சட்ட வரைபை சர்வஜன வாக் கெடுப்பு இன்றி நிறைவேற்றியே தீரு வோம்"என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்தார்.



20ஆவது திருத்தச் சட்ட வரைவு குறித்து ஆளுங்கட்சி உறுப்பினர்களைத் தெளிவுபடுத்துகின்ற சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் பங்காளிகளாகச் செயற்பட்டு வருகின்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதன்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நிறைவேற்றுவோம் என்று தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு நாம் வாக்குறுதியளித்து விட்டோம். அதேவேளை, புதிய அரசமைப்பும் கொண்டுவரப்படும் என்றும் உறுதியளித்து விட்டோம்.

எனவே, இந்த இரு வாக்குறுதிகளையும் நாம் மீறவே முடியாது. முதலில் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தையும் அதன்பின்னர் புதிய அரசமைப்பையும் நாம் நிறைவேற்றியே தீர வேண்டும். அந்தக் கருமங்களிலிருந்து நாம் பின்னிற்கப்போவதில்லை.

20ஆவது திருத்தம் அவசியமற்றது என்ற மதத் தலைவர்களின் கோரிக்கையை நாம் கவனத்தில் கொள்கின்றோம். ஆனால், எமது ஜனாதிபதியையும் எமது அரசையும் நம்பி வாக்களித்த நாட்டு மக்களை நாம் ஏமாற்ற முடியாது.

20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள குழுநிலை விவாதத்தின் போதும் திருத்தங்களை மேற்கொள்ள முடியும். இதன்போது உயர்நீதிமன்றத்தின் கட்டளையும் கவனத்தில் கொள்ளப்படும்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி நாம் எதனையும் செய்ய முடியாது. ஆனால், சர்வஜன வாக்கெடுப்புக்கு நாம் செல்லத் தேவையில்லை.

அதைத் தவிர்க்கும் வகையில் சட்ட வரைபில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கடற்படையிலிருந்து விலகிய யோஷித

## பிரதமரின் தலைமைப் பணியாளராக பொறுப்பேற்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படையில் இருந்து தான் விலகி விட்டதாக யோஷித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமைப் பணியாளராகப் யோஷித ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர், சமூக ஊடகங்களில் வெளியான விமர்சனங்களிற்கு பதிலளிக்கும் விதமாக இதனை தெரிவித்துள்ளார்.


கடற்படையில் இருந்து விலகும் தனது விண்ணப்பம் ஒக்டோபர் 10ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சு ஏற்றுக்கொண்டதை யடுத்து, பிரதமரின் வேண்டுகோளின் பேரில் அவர் புதிய பொறுப்பில் இணைந்து கொண்டதாக தெரிவித்தார்.

14 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர், எட்டு மாதங்களுக்கு முன்பு கடற்படையில் இருந்து இராஜினாமா செய்ய விண்ணப்பம் செய்ததாகவும், அவரது விண்ணப்பம் ஒக்டோபர் 10 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் யோஷித தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமை பணியாளராக நியமிக்கப்படுவது ஒக்டோபர் மாதம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

"நான் அவருக்காக வேலை செய்ய வேண்டும் என்று பிரதமர் விரும்பினார். எனவே அவரது வேண்டுகோளின் பேரில் எனது வாழ்க்கையை மாற்ற முடிவு செய்தேன்.

முந்தைய அரசாங்கத்தின் போதுகூட, நான் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டு, நான்கு ஆண்டுகளாக கடற்படையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டபோது, நான் எனது தந்தைக்கு வேலை செய்தேன். என் அனுபவத்தை வளர்த்துக் கொண்டேன். எனவே இந்த நிலை ஒரே இரவில் எனக்கு வரவில்லை" என்று அவர் மேலும் கூறினார்.



கடந்த வாரம் சீனத் தூதரக அதிகாரப்பூர்வ கணக்கிலிருந்து ஒரு டுவீட் மூலம் வாழ்த்தப்பட்ட பின்னர், பிரதமர் ராஜபக்ஷவின் புதிய தலைமை பணியாளராக அவர் நியமிக்கப்பட்டது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து விமர்சனங்களும் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# பி.சி.ஆரில் பலனில்லை

## சமூகப் பரவலானது கொரோனா

### ஆய்வக சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காணுவதற்காக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனை முற்றிலும் போலியானதென இலங்கை ஆய்வக சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனை மாபியா ஒன்று உள்ளதாகவும் அதற்கு சுகாதார அமைச்சும் தொடர்பு என ஊடகமொன்றிக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தனியார் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் சரியானதென ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் இந்த பரிசோதனை ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையில் மேற்கொள்ளப்படுகிறதே தவிர கொள்கைக்கமைய மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

தற்போது நோய் பரவல் தீவிரமடைந்துள்ளதாகவும் எந்தளவு கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளார்கள் என தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தற்போது சமூகத்திற்குள் பரவியுள்ளது. அரசாங்கத்தினால் கூறப்படும் தகவல்கள் போலியான விடயம் என அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

# வர்த்தகர்களுக்கு கொரோனாத் தொற்று

## அமைச்சருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை

(கொழும்பு)

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டுள்ளார்.

எனினும் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - புறக்கோட்டையில் அமைந்துள்ள பல மொத்த விற்பனையாளர்கள் அண்மையில் அமைச்சருடன் கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, கொழும்பு - புறக்கோட்டையில் 4 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்புகொண்ட வியாபாரி ஒருவரும் அமைச்சருடனான கலந்துரையாடலில் பங்குபற்றியுள்ளார்.

இந்த நிலையில், அமைச்சருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்குமா என்ற சந்தேகத்தில் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது பரிசோதனை மூலம் உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

# கப்பல் துறை நிறுவனத்தில்

## 11 ஊழியர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் அமைந்துள்ள கொழும்பு கப்பல் துறை நிறுவனத்தில் பணிபுரியும் மேலும் 11 ஊழியர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு கப்பல்துறை நிறுவனத்தில் இதற்கு முன்னர் கொரோனா தொற்றாளர்கள் ஐவர் அடையாளம் காணப்பட்ட நிலையில், கப்பல் துறை நிறுவனத்தில் பணிபுரியும் 16 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 625 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் தொற்றுக்கு உள்ளான 2 ஆயிரத்து 172 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கடல் புறா

## விமோசனச் சீலை




"என்ன தந்திரமாயிருக்கும்?"

எனக்குப் புரியவில்லை. ஆனால் யாரோ நண்பர்கள் உதவி அவருக்கு இருந்திருக்க வேண்டும்."

ஆம். ஆம், உண்மை."

"அதுமட்டுமல்ல சேந்தா! அந்த நண்பர்கள் எண்ணிக்கையும் கணிசமாயிருக்க வேண்டும்."

அதெப்படித் தெரிகிறது?"

"சிறையிலிருந்து தப்பிய பின்பு இன்னும் அவர் பாலூர் பெருந் துறையில் சுதந்திரமாக உலாவு கிறார். அதுமட்டுமல்ல, புறா மூலம் குணவர்மனுக்குத் தூதும் அனுப் பியிருக்கிறார். அநபாயருக்கு இவ்வூ ரில் பக்கபலம் நிரம்ப இருக்கிறது. சந்தேகமில்லை.

இதைக் கேட்டதும் வியப்புக்குள் ளான கூலவாணிகன். "என்ன தூதுப் புறாவா! செய்தியா?" என்று ஆச்சரியத்துடன் வினவினான். சிறிது நேரத்துக்கு முன் பீமனும் இளையபல்லவனும் புறாவைப் பற்றிப் பேசிக் கொண்டதைக் கூல வாணிகனும் கேட்டுக் கொண்டு தான் இருந்தானெனினும் அப்போ திருந்த குழப்பமான மனநிலையில் அவன் அதைச் சரியாக மனதில் வாங்கவில்லை.

இளையபல்லவன், "ஆம் சேந்தா! குணவர்மனுக்குப் புறா மூலம் தூது வந்தது. அதில் அநபாயரே கையொப்பமிட்டிருந்தார்" என்றான்.

"அநபாயரே கையொப்பமிட்டி ருந்தாரா?"

"ஆம் சேந்தா!"

"என்ன கண்டிருந்தது ஓலை யில்?"

"குணவர்மனை மூன்று நாட் கள் பொறுத்திருக்கும் படி கண்டி ருந் தது. மூன்று நாட்கள் அந்த மாளி கையில் எது நடந்தாலும் கவனிக்க வேண்டியதில்லையென்றும் எழு தியிருந்தது."

இம்முறை கூலவாணிகன் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான் "மூன்று நாட்கள்! மூன்று நாட்கள்!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

கூலவாணிகனின் வருத்தத்தை யும் பெருமூச்சையும் கவனித்த இளையபல்லவன் கேட்டான்: மூன்று நாட்களுக்கென்ன சேந்தா?"

"மூன்று நாட்கள் இந்தப் பாலூர்ப் பெருந்துறையில் அநபாயர் இருக் கப்போகிறார் என்பது தெளிவாக வில்லையா?" என்று வினவினான் சேந்தன்.

"ஆம்"

அப்படியானால் அந்த மூன்று நாட்களில் ஒவ்வொரு விநாடியும் அவர் உயிர் ஆபத்திலிருக்கிறது."

"ஆபத்துக்கு அஞ்சும் சுபாவம் அநபாயருக்கும் கிடையாதென்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியும். அதனால்தான் நான் அஞ்சுகிறேன்."

"நீ அஞ்சுவானேன்?"

"சோழநாட்டு நலனில் அக்க றையுள்ள யாரும் அஞ்சுவார்கள்."

"என்ன அச்சம் அதில்?"

கூலவாணிகன் பதில் சொல்ல வில்லை. சிறிது நேரம் இளைய பல்லவனை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான் பிறகு சொன் னான்: "நான் வணிகன் மட்டுமல்ல, இளைய பல்லவரே!"

"ஆம்" என்று தலை அசைத்தான் இளையபல்லவன், கூலவாணிகன் எதைச் சொல்ல உத்தேசிக்கிறான் என்பதை அறியாமல்.

"நினைவு தெரிந்த நாளாக ஒற் றன் வேலையும் செய்கிறேன்."

"ஆம், சேந்தா."

"ஆகவே சோழநாட்டு அரசியல் நிலை, படைத் தலைவர்களை விட எனக்கு நன்றாகத் தெரியும்."

"ஓகோ!"

"நீங்கள் பெரும் வீரர்,இணை யற்ற படைத்தலைவர். ஆனால் உங்களுக்கு மக்கள் மனம் தெரி யாது. அவர்களுடன் சதா உலவிப் பழகும் நான்தான் அறிவேன்."

"சரி, சேந்தா."

"சோழநாட்டு மக்கள் என்ன விரும்புகிறார்கள் தெரியுமா, படைத் தலைவரே!"

"சொல்"

"அநபாயரை அரியணையில் எதிர்பார்க்கிறார்கள்" திடீரெனக் கூல வாணிகள் வீசிய அந்தச் சொல் சரத் தால் தாக்குண்டவனைப் போல் சில விநாடிகள் அசைவற்று நின்று விட் டான் இளையபல்லவன், பிறகு கூலவாணிகனை நோக்கி, "சேந்தா, வீரராஜேந்திர சோழதேவர் இப்பொ ழுதுதானே அரியணையில் ஏறியி ருக்கிறார்" என்று வினவினான்.

"ஆம், இளையபல்லவரே" என் றான் கூலவாணிகன்.

"அப்படியிருக்க அநபாயர் எப்படி அரியணை ஏற முடியும்?"

"மக்கள் அவரை விரும்புகிறார் கள்."

"வீரராஜேந்திரரிடம் பக்தியில் லையா மக்களுக்கு?"

"இருக்கிறது. அவர் வீரத்தில் இருக்கிறது. ஆனால்..?"

"ஆனால் என்ன சேந்தா?"

"அக்கம்பக்கத்து நாடுகள் விட யத்தில் அவர் கடைப்பிடிக்கும் கொள் ளையை மக்கள் ஏற்கவில்லை. உதாரணமாக, வேங்கியில் சாளுக் கிய விஜயாதித்தனை அரசாள விட்டிருப்பது பிடிக்கவில்லை. அங்கு அரசாள வேண்டியவர் அம்மாங்கா தேவியின் புதல்வரல்லவா?"

"ஆம் ஆனால் இப்பொழுது சாளுக்கியர்களுடன் போர் தொடுப் பதில் கஷ்டங்களிருக்கின்றன."

"கஷ்டங்களை மக்கள் கவனிப் பதில்லை இளைய பல்லவரே, நீதியைத்தான் கவனிக்கிறார்கள். நீதி நிலைத்திருந்தால் அநபாயர் வேங்கியின் அரியணையில் அமர்ந்திருக்க வேண்டும். அமர்ந் திருக்கத் தகுதியுள்ளவர் என்று மக்கள் நினைக்கிறார்கள். அநபாயர் போர் வீரர் மட்டுமல்ல இராஜதந்திரத் திலும் வல்லவர். வீரராஜேந்திர ருக்கு இராஜதந்திரம் அத்தனை போதாது என்பது மக்கள் நம் பிக்கை."

சேந்தன் கூறியது அத்தனையும் சரியென்பது தெரிந்தே இருந்தது இளைய பல்லவனுக்கு. வீரரா ஜேந்திரனுக்குப் பிறகு எப்படியும் அநபாயன் சோழ அரியணையில் மட்டுமன்றி வேங்கி அரியணை யிலும் அமரக்கூடும் என்ற நம்பிக் கையுமிருந்தது. இருப்பினும், அதற் குக் காலமிருக்கிறது என்று நினை த்த இளையபல்லவன் பதிலேதும் சொல்லவில்லை. கூலவாணிகன் சேந்தனே மேற்கொண்டு பேசி னான். "நான் அஞ்சியதற்குக் கார ணம் தெரிகிறதா உங்களுக்கு? அநபாயர் நமது நாட்டின் உயிரி.. அவர் இந்த ஊரிலிருக்கும் மூன்று நாட்களும் அவர் உயிர் ஆபத் திலிருக்கிறது."

அதை ஆமோதித்த இளையபல் லவன். "அதைப்பற்றி நாம் கவலை ப்பட வேண்டியதில்லை சேந்தா. நாளைக்கு நமது உயிர் எமலோ கத்தை நாடிச் சிட்டாய்ப் பறக்கும்!" என்று கூறிய பின்பே, அநபாயனை னப் பற்றிய நினைப்பிலிருந்து சிறையின் சூழ்நிலைக்கு வந்த கூலவாணிகன், அடுத்த நாள் தன் தலை போய்விடுமென்பதை நினை த்து நடுங்கினான்.

இளையபல்லவன் மட்டும் அந்த நினைப்பை அறவே உதறிவிட்டு, மஞ்சத்திலிருந்து பஞ்சணையை நன்றாகத் தட்டிவிட்டு, "அப்பாடா" என்று படுத்தான்.


அவன் அப்படி ஆனந்தமாகப் படுத்தது கூலவாணிகனுக்குப் பெரும் வெறுப்பாயிருக்கவே, "ஏன், பஞ்சணை சுகமாயிருக்கிறதோ?" என்று வினவினான்.

"ஆமாம், சேந்தா! கலப்பட மில்லாத இலவம் பஞ்சு" என்றான் இளைய பல்லவன்.

"நன்றாக உறங்குங்கள்" என்று இகழ்ச்சியுடன் கூறி கூலவாணிகன், அடுத்த சில விநாடிகளில் அயர்ந்து போனான். இளையபல்லவன் சில விநாடிகளிலேயே கண்களை மூடி நன்றாகத் தூங்க முற்பட்டதைக் கண்டு "நாளை உயிர் போக இரு க்க எப்படித் தூக்கம் வருகிறது இவருக்கு?" என்று சொல்லிக் கொண்டு மிதமிஞ்சிய வெறுப்புடன் உறங்காமலே அன்றிரவைக் கழித் தான் கூலவாணிகன்.

(தொடரும்...)

# ஆட்டோக்கள் மோதல் எண்மர் படுகாயம்



(கொழும்பு)

எல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெமோதரை நீர்த்தேக்கத்துக்கு அருகில் நேற்றுக் காலை இரண்டு ஆட்டோக்கள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் எட்டுப் பேர் படுகாயமடைந்தனர்.

பதுளையிலிருந்து பண்டாரவளை பகுதியை நோக்கி சென்ற ஆட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து தெமோதரையிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற ஆட்டோ மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஆட்டோவில் பயணம் செய்த இரண்டு மாத குழந்தையும் ஏழு வயது சிறுவனும் ஆண்கள் நான்கு பேரும் பெண்கள் இரண்டு பேர் என எட்டுப்பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-4)

# குருநாகலில் ஊரடங்கு

(குருநாகல்)


குருநாகல் மாவட்டத்தின் சில பொலிஸ் பிரிவுகளில் மறு அறிவித்தல் வரும் வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி குளியாப்பிட்டி, நரமல்ல, பன்னால, கிரியுல்ல மற்றும் தும்மலசூரிய பொலிஸ் பிரிவுகளிலேயே இவ்வாறு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது என் அவர் தெரிவித்தார். (ஐ-4)

# கொரோனாவால் சிறுவர்களுக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் சிறார்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது என சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**



குழந்தைகளுக்கு பிறக்கும் போதே பீ.சீ.ஜீ.ஊசி மருந்து வழங்கப்படுவது, ஆறு மாதங்கள் வரை தாய்ப்பால் வழங்கப்படுவது, இன்புளுவன்சா, டெங்கு நோய்களுக்கான சிகிச்சைகள், சுகாதார பாதுகாப்பு உணவுகள் வழங்கப்படுவதன் மூலம் குழந்தைகளில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து இருப்பது கொரோனா வைரஸ் சிறார்களின் உடலில் தாக்குப்பிடிக்க முடியாமைக்கான காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை கொரோனா தொற்றாளர்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் போது கொரோனா வைரஸ் தொற்றிய ஒரு சில சிறார்கள் மாத்திரமே கண்டறியப்பட்டதாக மருத்துவர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# இரண்டு வயது குழந்தைக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரண்டு வயது குழந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த குழந்தையின் தாய் மற்றும் தந்தைக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த குடும்பத்தினருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

அத்தோடு, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற் கொள்ளப்பட்டது.

குறித்த பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளிவந்த நிலையிலேயே அவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து அவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனையினை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2149


வருண்




யுகேஷ்




திவ்யா





சிவசங்கரி




லக்ஸனா




தாருஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 17.10.2020 - 15.11.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் லாப ஸ்தானத்திலும், லாபாதிபதி சூரியன் உங்கள் இராசியிலும் சஞ்சரிக்கின்றார்கள். குருவால் பார்க்கப்பட்ட செவ்வாயின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே பொருளாதாரத்தில் திருப்தி ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். நீண்ட நாட்களாக விற்காத நிலம், இப்பொழுது விரும்பிய வண்ணம் விற்பனையாகி லாபத்தைக் கொடுக்கும்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெற்றாலும், உச்சம் பெற்ற புதனோடு இணைந்து 'நீச்ச பங்க இராஜயோகத்தை உருவாக்குவார். எனவே பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதுமனை கட்டிக் குடியேறும் வாய்ப்பு உருவாகும். 'புதிய தொழில் தொடங்க அல்லது பழைய தொழிலை விரிவு செய்ய மூலதனம் வேண்டுமே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். உங்களுடைய விரயஸ்தானம் பலப்படுவதால் சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது.

### மீன செவ்வாய்

ஒக்டோபர் 26 ஆம் திகதி மீன இராசிக்கு, வக்கிர இயக்கத்தில் செவ்வாய் செல்கின்றார். எனவே அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவு கிடைக்கும். அரச வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். ஆகாரக் கட்டுப்பாட்டின் மூலம் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ள இயலும். உங்களை விட்டு விலகிச்சென்ற சகோதரர்கள், 'ஏன் விலகினோம்' என்று இப்பொழுது வருத்தப்படுவர்.

## கல்யாண முயற்சிகள் கைகூடும்

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்காலத்தில் கொஞ்சம் வீண் விரயங்கள் அதிகரிக்கலாம். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. உறவினர் பகையும் உருவாகலாம். வரன்கள் வாசல் தேடி வந்தாலும்,




கைநழுவிச் செல்லும். திடீரென உத்தியோகத்தில் மாற்றம் வந்து மன உளைச்சலைக் கொடுக்கலாம். நவம்பர் 4 ஆம் திகதிதுலாம்இராசியான உங்கள் இராசிக்கு புதன் வருகின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து, 'புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகை கிரகம் என்பதால் அவர் நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். அவரது பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே தொழிலில் முன்பு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வீடு மாற்றங்கள் உருவாவதற்கான அறிகுறிகள் தோன்றும். குரு வழிபாடு நன்மை தரும். இம்மாதம் சஷ்டி விரதமிருந்து சண்முகநாதப் பெருமானை வழிபட்டால் யோகங்கள் வந்து சேரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் 2 இல் கேது, 8 இல் ராகு இருப்பதால் எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும். வரவைக்காட்டிலும் செலவுகளே கூடுதலாக இருக்கும். எதையும் யோசித்துச் செய்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் தான் அமைதி கிடைக்கும். தாய் மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு எதிர்பார்த்த அளவு கிடைக்காது. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்ளவும்.



சார்வரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றார். தனாதிபதி குரு தன ஸ்தானத்திலும், லாபாதிபதி புதன் லாப ஸ்தானத்திலும் இருப்பதால் பொருளாதாரம் சிறப்பாகவே இருக்கும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். சொத்துக்களாலும் இலாபம் கிடைக்கும் நேரமிது. வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல தகவல் வரலாம்.

### நீச்சம் பெறும் சுக்கிரன்

இதுவரை சிம்ம இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல் கின்றார். அங்கு அவர் நீசும் பெற்றாலும் உச்சம் பெற்ற புதனோடு சேர்வதால் 'நீச பங்க இராஜயோகத்தை உருவாக்குகின்றார். நீண்ட நாட்களாக தாமதித்து வந்த காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்று வந்த தொழிலை, இப்பொழுது சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் வாய்ப்பு கைகூடி வரும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும், கல்யாண வாய்ப்பினை முன்னிட்டும் நீங்கள் எடுத்த புது முயற்சிகளுக்கு உடனடியாக நற்பலன் கிடைக்கும்.

### மீன செவ்வாய்

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், ஒக்டோபர் 26 ஆம் திகதி மீன இராசிக்கு வக்கிர இயக்கமாகச் செல்கின்றார். பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் வரும்பொழுது பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவு கிடைத்து, புதிய முதலீடுகளைச் செய்யும் வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தாமதப்பட்டு வந்த ஊதிய உயர்வு இப்பொழுது கிடைக்கும். புதிய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு, குறிப்பாக அரசுவேலைக்கு விண்ணப்பித்திருந்தால் நல்ல பதில் கிடைக்கும்.

## தொழில் வளர்ச்சி சிறப்பாக அமையும்

### புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

ஒக்டோபர் 27 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கும் புதன், வக்கிர நிவர்த்தியாகின்றார். லாப ஸ்தானம்




பலம்பெறும் இந்த நேரத்தில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். என்றைக்கோ வாங்கிப்போட்ட சொத்து, இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து அதன் விற்பனை மூலம் பெரும் தொகை கிடைக்கும். இதன்மூலம் தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நவம்பர் 4 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து 'புத- ஆதித்ய யோக'த்தை உருவாக்குகின்றார். இக்காலத்தில் பிரபலமானவர்களின் நட்பால் பெருமை காண்பீர்கள்.

### மகர குருவின் சஞ்சாரம்

நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு தன பஞ்சமாதிபதியான குரு நீச்சம் பெறுவதால் எதையும் கொஞ்சம் யோசித்துச் செய்வது நல்லது. திடீர் விரயங்களும் ஏற்படலாம். குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய மூன்று முக்கிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும். இம்மாதம் கற்பக விநாயகர் வழிபாடு உங்கள் கனவுகளை நனவாக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வளர்ச்சி கூடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். உடன் பிறந்தவர்கள் பகை மறந்து செயற்படுவர். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் தானாகவே கிடைக்கும். வராஹி வழிபாடு வளம் சேர்க்கும்.

(தொடரும்)


# கிணற்றிலிருந்து துப்பாக்கி மற்றும் ரவைகள் மீட்பு

(அக்கரைப்பற்று)


கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து ரி-81 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் மீட்கப்பட்டு, அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை- சாம்பல்திடல் பகுதியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் இருந்த கிணற்றில், ஆயுதங்கள் இருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவ்விடத்தை முற்றுகை இட்டனர். இதன்போது குறித்த கிணற்றில் இருந்து குழாய் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ரி-81 ரக துப்பாக்கி மற்றும் 30 தோட்டாக்களும் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆயுதம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இது



வரை கைது செய்யப்படவில்லை என்பதுடன், அக்கரைப்பற்று பொலிஸாரிடம் அவைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-7)



# ஆன்மீகம்

## இன் சொற்கள் தரும் இனிமையான வாழ்க்கை!

யோசித்து, நிதானமாக அளவறிந்து வார்த்தைகளைப் பயன்படுத்துபவர்கள் ஆபத்தில் சிக்குவதில்லை. 'சொல்லுகிற சொல்லுக்கு நாம்தான் எஜமானர். சொன்ன சொல் நமக்கு எஜமானர்!' என்கிறது ஒரு பொன்மொழி. 'நேற்றோடு நீ சொன்ன வார்த்தை காற்றோடு போயாச்சா?' என்று நம்மைக் கிண்டல் செய்கிறது திரைப்படப் பாடல் ஒன்று! தன் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியினை டாக்டர் அப்துல் கலாம் விபரிக்கிறார்:

நான் குழந்தையாக இருந்த போது ஒருநாள் எங்கள் தாயார் எப்போதும் போல் எங்களுக்கு உணவு சமைத்துப் பரிமாறினார். பகல் முழுதும் கடுமையான வேலை. இரவு ரொட்டி தயாரித்து எங்களுக்குப் பரிமாறினார். ரொட்டி கருகி இருந்தது. என் அன்னையார் தந்தையிடம் 'மன்னித்துக்கொள்ளுங்கள். ரொட்டி க்ருகிப் போய்விட்டது!' என்றார்.

என் தந்தையோ 'கருகிய ரொட்டியின் சுவை எனக்குப் பிடித்த ஒன்று... தயக்கமில்லாமல் பரிமாறு!' என்றார். அன்றைய இரவில் என் அப்பாவிடம் இதுபற்றி நான் கேட்டேன். அப்பொழுது என் அப்பா சொன்னார்: 'உன் அம்மா நாள் முழுதும் குடும்பக் கடமைகளை இடைவிடாது செய்து சோர்வாகி விட்டார். ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்தாது.

ஆனால், கடுமையான வார்த்தைகள் ஒருவரை வெகுவாகக் காயப்படுத்தும். வாழ்க்கை முழுவதும் ஒழுங்காக செயலாற்று பவர்களும், தவறே செய்யாத முழுமையான மக்களும் தேடிப் பார்த்தாலும் கிடைக்க மாட்டார்கள். நான் எதிலும் மிகச் சிறந்தவன் இல்லை. பிறந்த நாட்களையும் மண நாட்களையும்கூட மறந்துவிடுவேன். நான் வாழ்வில் கற்றுக்கொண்டது, மற்றவர்கள் செய்யும் தவறுகளை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களுடைய உறவுகளைப் போற்றுங்கள். வாழ்க்கை மிகக் குறுகிய காலம் கொண்டது. இதில் பிறர் குறைகளைப் பெரிதுபடுத்தி என் சொந்தங்களைக் குறைகூற வேண்டாம்.

தவறானவர்களுக்குக் கருணை காட்டுங்கள், இதமாகப் பேசுங்கள், வாழ்க்கையை வாழுங்கள் என்பது தான். அப்பா தனக்கு மட்டும் சொன்னதை, கலாம் நமக்கும் வெளிப்படுத்தியது தான் எவ்வளவு நல்லது!

தீயினாற் சுட்ட புண் உள் ஆறும்!
ஆறாதே நாவினாற் சுட்ட வடு.

என்கிறார் திருவள்ளுவர். ஹங்கேரியப் பழமொழி ஒன்று அற்புதமாகச் சொல்கிறது: 'பல சமயங்களில் முப்பத்திரண்டு பற்களாலும் நாக்கை அடக்க முடிவதில்லை. நம்மிடமிருந்து வெளிவரும் வார்த்தைகள் தான் நம்மை நண்பனாகவும் ஆக்குகிறது. விரோதியாகவும் மாற்றுகிறது. சொல்லின் சூட்சுமம் அறிந்து பிரயோகித்தால் நம் வாழ்வு பிரகாசம் அடையும். 'மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்!' என்கிறார் மகாகவி பாரதி.

# செய்தித்துளிகள்

## பொலிஸ் வேடமிட்ட கொள்ளைக் கும்பல் சிக்கியது

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களாக தம்மை அடையாளப்படுத்தி 15 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்த பிரபல கொள்ளையர் கஹங்கொட சுத்தா உள்ளிட்ட சந்தேக நபர்கள் ஐவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-7)

## கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

காலாவதியாகியுள்ள அனைத்து சாரதி அனுமதிப் பத்திரங்களும் டிசெம்பர் 31 வரை செல்லுபடியாகும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. போக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியிலேயே இவ்வாறு அனைத்து சாரதி உரிமங்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அமைச்சினால் வெளிடப்பட்ட வர்த்தமானியானது எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரை நீடிக்குமென போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலக செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மட்டக்களப்பில் விபத்து; இருவர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவில் அதி சொகுசு கார் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளதுடன் கார் முற்றாக சேதமடைந்துள்ளது. நேற்று அதிகாலை தேற்றாத்தீவு உப தபால் அலுவலகத்துக்கு முன்னால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (நி-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 150 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 170 | 180 | 200 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 100 | 80 |
| கோவா | 140 | 120 | 110 | 120 |
| கரட் | 100 | 180 | 180 | 200 |
| பூசணி | 50 | 50 | 50-60 | 60 |
| புடோல் | 80 | 70 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 220-240 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 140-160 | 140 |
| பாகற்காய் | 250 | 280 | 220. | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 140 | 150 | 120 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 240 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 180 | 160 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 240 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 140 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 160 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | 280 | -- | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | -- | -- |




## சிங்கமும் கழுதைப்புலியின் பங்கும்

அன்று ஒரு நாள் சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. அடுத்தநாள் சிங்கம் பசுவைக் கொன்றது.

கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கை வாங்கிவரச் சொன்னது. கழுதைப் புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப் புலியோ, நீ ஏன் குடலை மட்டும் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்கு கேட்கவில்லையா என்று கேட்டது. பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும் என்றது குட்டி கழுதைப்புலி.


அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

கழுதைப்புலி வந்ததைக் கண்டு ஏன் இங்கே வந்தாய்? என்று கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது.

பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப்புலி பயந்து தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு ராஜ சிங்கமே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி. ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்.

குடலை சிங்கத்திடம் கொடுத்துவிட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்துவிட்டு வருகிறீர்களே? என்று கேட்டது குட்டி கழுதைப்புலி.

மகனே! சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது.



அதைக்கண்டு நடுங்கி விட்டேன்.

எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக என்றது தாய் கழுதைப்புலி.

நீதி:

**நம்மைவிட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதை விட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது**

## ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

### பின்கதைச் சுருக்கம்




சோழர் பேரரசில் இறுதிப் போர் வெற்றியை அடைந்தவர் என்கின்ற பெருமை இவருக்கு உண்டு. இவர் கொப்பம் என்னுமிடத்தில் சாளுக்கியர்களுடன் போரில் ஈடுபட்டுக் கொண்டு இருந்துபோது இறக்க நேரிட்டது.

அடுத்ததாக, ராஜாதிராஜனின் தம்பியான இரண்டாம் ராஜேந்திரனும் பின்னாலேயே இரண்டாம் ராஜேந்திரனின் தம்பி வீர ராஜேந்திரனும் பின்னர் அவருடைய தம்பியான அதிராஜேந்திரனும் வரிசையாக ஆட்சி செய்துள்ளனர். அதில், ராஜேந்திரன் பதவிக்கு வந்த சில மாதங்களில் இறந்து போனார்.

அவருக்கு வாரிசுகள் இல்லை. இதனால் சோழ மரபில் நேரடி வாரிசுகள் பதவிக்கு வருவது தடைப்பட்டது. சாளுக்கிய சோழர் மரபில் வந்த முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்தார். சோழர்களின் அத்தியாயம் தன் முடிவை நோக்கி மெள்ள நகர ஆரம்பித்தது.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில்தான் போரில் தோற்றுப்போய் சோழர் படை இலங்கையைக் காலி செய்தது.

இலங்கையின் தென் பகுதியை ஆண்ட விஜய பாகு வடபகுதியை ஆண்டு கொண்டிருந்த சோழர் ஆட்சியின் போது போர் தொடுத்தார். அநுராதபுரமும் பொலநறுவையும் சோழர் கைப்பிடியிலிருந்து விலகின.

போரில் சோழர்கள் பின்வாங்கவும் செய்வார்கள் என்பதை உலகத்துக்குக் காட்டிய போர் அது. இலங்கையும் கங்கபாடியும் வேங்கைநாடும் அடுத்தடுத்துச் சோழர்களின் பிடியிலிருந்து நழுவின.

இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜராஜசோழன், மூன்றாம் ராஜேந்திர சோழன் என்று இத்தனை பேர் ஆண்டபோதும் சோழநாட்டைக் காப்பாற்ற முடியாமல் போனது.

சோழர்கள், பாண்டியர்களால் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானார்கள். பயத்தால், மனச்சங்கிலியால் தம்மைத் தாமே கட்டிக் கொண்டு அடிமைகளானார்கள்.

தன்மானம் இழந்து பயந்து பயந்து பதற்றத்துடனே வாழ வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்கள் படிப்படியாக அழிந்து போக வேண்டும் என்கிற பாண்டியர்களின் ஆசைக்கு இணங்கிப் போனார்கள்.

மூன்றாம் ராஜராஜன் காலத்தில் தஞ்சாவூர் தரைமட்டமானது. சோழர்களின் செல்வாக்கு, உயரம் எல்லாமே மணல் வீடாகக் கலைந்தன.

அதற்குப் பிறகு சரிந்த சோழ சாம்ராச்சியத்தை யாராலும் எழுப்பவே முடியவில்லை. துர்ப்பாக்கியம் இன்னொரு ராஜராஜ சோழன், சோழர் சரித்திரத்தில் பிறகு தோன்றவேயில்லை. (முற்றும்)

**நாளை முதல் "மகா அலெக்ஸாண்டர் வாழ்க்கை வரலாறு" பிரசுரமாகும்.**

தீயவனை பிறர் அழிக்க வேண்டியதில்லை. அவன் தன்னைத் தானே அழித்துக்கொள்கிறான்.
– புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரணில் அரசாங்கத்தில் குறுநில மன்னராக இருந்த ரிஷாத்

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் குறுநில மன்னராக இருந்த ரிஷாத் இப்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது, ரிஷாத் பதியூதீன் வன்னி மாவட்டத்தை தான் சார்ந்தவர்களின் மாவட்டமாக மாற்றும் நடவடிக்கையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

தமிழ் மக்களின் காணிகளை கபளீகரம் செய்யும் நடவடிக்கையில் ரிஷாத் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்களை தமிழ் மக்கள் பரவலாக முன்வைத்தனர்.

எனினும் அது தொடர்பில் எந்த விளக்கமும் விசாரணையும் நடத்தப்படவில்லை.

இதுதான் என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ரிஷாத்தின் விடயத்தில் மௌனமாக இருப்பதையே விரும்பியது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலின் அரசாங்கத்தைக் காப்பாற்றுவதை தமது தலையாய கடமையாகக் கருதியதேயன்றி, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் அவர்கள் இம்மியும் கவனம் செலுத்தவில்லை.

இதற்கு நல்ல உதாரணம் வன்னி மாவட்டத்தின் குறுநில மன்னராகத் தன்னை ஆக்கிக் கொண்டு தமிழ் மக்களின் நிலங்களைக் கபளீகரம் செய்கின்ற முயற்சியிலும் வேலை வாய்ப்புக்களைத் தான் சார்ந்தவர்களுக்கு வழங்குவதிலும் ரிஷாத் மிகத் தீவிரமாக இருந்தார்.

எனினும் அதனை எதிர்க்கவும் கண்டிக்கவும் கூட்டமைப்பு தவறியிருந்தது.

தவிர, வடக்கு – கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைப்பதென ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானத்தை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டு அமைதியாக இருந்தது.

வடக்கு – கிழக்கில் பௌத்த ஆதிக்கம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமெனத் தமிழ் மக்கள் நினைத்திருக்க,

இரா.சம்பந்தர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு – கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைப்பதற்கு மௌனமாக இருந்து சம்மதம் தெரிவித்தமை அபத்தமான காரியம்.

ஆக, வன்னி மாவட்டத்தில் தமிழ் மக்களின் நிலங்களை ரிஷாத் பதியூதீன் கபளீகரம் செய்கிறார் எனத் தமிழ் மக்கள் குரல் கொடுத்தபோது, அதுவிடயத்தில் கூட்டமைப்பினர் அமைதியாக இருந்தாலும் இப்போது ரிஷாத் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் ரிஷாத் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதி தொடர்பாக விசாரிப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு உதவுவதாக அமையும்.

### அரசியல்வாதிகளை காப்பாற்றவா

# மாகந்துரவை மிருகங்களைப் போன்று அரசு படுகொலை செய்துள்ளது

## சபையில் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலமாகாதிருக்கவே பிரபல போதைப் பொருள் கடத்தல் மன்னனும்பாதாள உலகத்தலைவருமான மாகந்துரே மதுஷ் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று எதிர்கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜே.வி.பியின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளை காப்பாற்றவா மதுஷ் படுகொலை செய்யப்பட்டார் என்று கேள்வி எழுப்பினார்.

மாகந்துரே மதுஷ் கொலை செய்யப்பட்ட விவகாரம் இன்று மிகப்பெரிய விடயமல்ல. அதுபோன்ற கொலைகள் இந்த நாட்டில் இதற்கு முன்னரும் அரங்கேறியிருக்கின்றன. ஆனால் இந்தக் கொலை மூலம் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்ட மற்றும் அதனுடன் தொடர்பிருந்த அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலமாவது தடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டுபாயில் இருந்து தனியார் ஊடகமொன்றுக்கு கடந்த ஜனவரி மாதத்தில் மதுஷ் பேட்டியொன்றை வழங்கியிருந்தார். அதில் 80க்கும் அதிகமான அரசியல்வாதிகள் தன்னுடன் கடத்தல் விவகாரத்தில் தொடர்பில் இருப்பதை கூறியிருந்தார். அவர் கைது செய்யப்பட்டு தடுப்பில் இருந்த நிலையில் நேற்று சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒருவேளை அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு வழக்கும் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தால் அவருடன் போதைப்பொருள் வர்த்தகம் செய்த அரசியல்வாதிகளின் பட்டியலும் அம்பலமாகியிருக்கும். ஆகவேதான் அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் உருவாகியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹேஷா விதானகே, கொலை செய்யப்பட்ட மாகந்துர மதுஷ் விவகாரத்தில் உரிய சட்டமுறைமைகள் பின்பற்றப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல கேள்விக்கான நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இந்த நாட்டிலுள்ள எந்தக் குற்றவாளிகளையும் சட்டத்தின் முன் கொண்டு சென்றதன் பின்னர் அவர் தவறுகள் அற்ற மனிதராக மாறுவதற்கு சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆனால் அவ்வாறானர்களின் கழுத்தில் துப்பாக்கியை வைத்து கொலைசெய்கின்றஅளவுக்கு இந்த அரசாங்கம் மாறியுள்ளதெனில் அது நாட்டின் எதிர்காலம் தொடர்பில் கேள்வியை எழுப்புகின்றது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய மாகந்துர மதுஷை கொலை செய்துள்ளார்கள். நாட்டில் உரிய சட்டமுறைமைகள் இருக்கின்ற நிலையில், இவ்வாறு மிருகங்களைப் போன்று கொலை செய்யும் அளவுக்கு இந்த நாடு வந்துள்ளமையானது ஒரே சட்டம் ஒரே நாடு என்பதையா மக்கள் எதிர்பார்த்தார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. (ம-03)

### கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையத்தில்

## பணியாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையத்தில் பணியாற்றிய ஒருவருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

உலக வர்த்தக மையத்தில் வெஸ்ட் டவர், 32 வது மாடியில் உள்ள ஒரு பிரிவில் பணியாற்றியவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக உலக வர்த்தக மையத்தின் வாடிக்கையாளர் தொடர்பு முகாமையாளர் சுரானி கோவிபல்கொட வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர் கடைசியாக ஒக்டோபர் - 08 ஆம் திகதி உலக வர்த்தக மையக் கட்டிடத்திற்கு வருகை தந்துள்ளார்.

இந்நிலையில் இந்தப் பணியாளர் பணிபுரிந்த நிறுவனம் மூடப்பட்டுள்ளது. அத்துடன் தொடர்புத் தடமறிதல் நிறைவடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட ஊழியருடன் தொடர்பு கொண்ட பணியாளர்கள் பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உலக வர்த்தக மைய கட்டடத் தொகுதி முழுமையான தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது எனவும் உலக வர்த்தக மையத்தில் வாடிக்கையாளர் தொடர்பு முகாமையாளர் சுரானி கோவிபல் கொட வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ம-03)

## ரவீந்திரநாத் தாகூரின் ஆன்மீகச் சிந்தனைகள்

### இயற்கை இறைவனின் நன்கொடை

❖ பனிஇலையின் நுனியில் சொட்டாகக் கீழே விழத்துடிக்கும் நீர்த்துளி போன்றது வாழ்க்கை. நம் வாழ்க்கையானது காலத்தின் எல்லையில் நாட்டிய மாடிக் கொண்டிருக்கிறது.

❖ நம் எல்லோருக்குள்ளும் கடவுள் குடியிருக்கிறார். ஆனால், நம்மால் தான் அதை உணர முடியவில்லை. மண்வெட்டும் விவசாயி, கல் உடைக்கும் தொழிலாளி ஆகியோரெல்லாம் கடவுளே! அவர்களின் வடிவத்திலும் அவர் காட்சிதருகிறார்.

❖ நாம் உலகைத் தவறாக உணர்ந்து கொண்டு நாம் உலகத்தின் தவறான எண்ணம் கொண்டு வாழ்கிறோம். உண்மையில் நாம் உலகத்திடம் ஏமாறுவதில்லை. நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

❖ தன்னுடைய சுயபுத்தியில் நம்பிக்கையில்லாத ஒருவனுக்கு, என்றுமே அவனுடைய வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்காலம் என்பது இருக்கவே முடியாது.

❖ இயற்கையும் இறைவனும் வேறு வேறல்ல. இறைவன் நமக்கு அளித்த நன்கொடையான இயற்கையை உணர்பவர்கள் அனைவரும் இறைவனையே உணரும் தகுதி பெறுவார்கள்

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பொய் சொல்பவன் அதில் தனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று வருந்துகிறான்.பொய் சொல்வதற்கு முன்பு பிறரை வஞ்சிக்கத் திட்டம் தீட்டுகிறான். அந்தத் திட்டம் வெளியாகி விடுமோ என்று எப்போதும் அஞ்சி,அவன் உள்ளம் பரிதவிக்கின்றது. -மகாவீரர்

# பழைய கழகம் விக்ரோறியன்ஸ் புதுப்பொலிவுடன் கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது





சிறந்த பந்து வீச்சாளர்



ஆட்ட நாயகன்



சிறந்த துடுப்பாட்ட வீரன்

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த வார இறுதியில் நடைபெற்ற போது சுழிபுரம் விக்ரோறியன்ஸ் அணி, கே.சி.சி.சி அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்தை தம்வசப்படுத்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்டனர். கே.சி.சி.சிஅணி 33 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றனர்.

பிரவீன் - 18, ஜெயரூபன் - 12, பானுஜன் - 11, துசியந்தன் - 12, சாமீபவன் - 17 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் விக்ரோறியன்ஸ் அணி சார்பாக பிரதீஸ் - 03, இலக்குகளையும், எஸ். விஜயகுமார் - 01 இலக்கினையும் பெற்றுக் கொண்டனர்.

120 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டுகளமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி 28.1 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களை பெற்றனர். பிரியங்கன் - 54, பிரசாந் ஆட்டமிழக்காது 35, செந்துரன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

இத் தொடரில் 5 இலக்குகளையும் ஹட்ரிக் உள்வாங்கலாக பெற்றுக் கொண்ட P.பிரதீஸ்க்கும் சதம் அடித்த வீரர் துவாரகசீலனுக்கும் விசேட பரிசில்களும் இறுதிப் போட்டியில் சிறந்த துப்பாட்ட வீரராக விக்ரோறியன்ஸ் அணியை சார்ந்த பி.பிரியங்கன், சிறந்த களத்தடுப்பாளராக கே.சி.சி.சி அணியை சார்ந்த பிரவீன், போட்டியின் சிறந்த வீரராக விக்ரோறியன்ஸ் அணியை சார்ந்த பிரசாந்தனுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் வெற்றி பெற்ற விக்டோறியன்ஸ் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் இரண்டாவது அணியாக தெரிவு செய்யப்பட்ட கே.சி.சி.சி. அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்பட்டன.

இவ் இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கொக்குவில் இந்து கல்லூரியின் பழைய மாணவனும் துடுப்பாட்டம், உதை பந்தாட்ட வீரராகவும் திகழ்ந்த பவானந்தன் (DRAU GHMAN) வெற்றி பெற்ற வீரர்களு க்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தார். (4)

## "நன்றி வணக்கம்" இறுதி முடிவை அறிவித்தார் விஜய்சேதுபதி

இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை. நன்றிவணக்கம் என்று 800 திரைப்படம் குறித்து நடிகர் விஜய் சேதுபதி பதில் தெரிவித்துள்ளார். முதலமைச்சர் பழனிச்சாமியின் தாயார் தவசாயம்மாள் காலமானதையொட்டி, நேற்று முன்தினம் நடிகர் விஜய்சேதுபதி நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

சென்னை கிரீன்வேஸ்சாலை இல்லத்தில் முதலமைச்சர் பழனிசாமியை சந்தித்த அவர், தொடர்ந்து முதலமைச்சர் பழனிச்சாமியின் தாயார் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

அஞ்சலி முடித்து விட்டு வெளியே வந்த விஜய் சேதுபதியிடம் 800 திரைப்படம் கைவிடப்பட்டதா? என்று செய்தியாளர்கள் ஒருவர் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த விஜய் சேதுபதி, நன்றி, வணக்கம் எல்லாம் முடிந்து விட்டது. இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை எனத் தெரிவித்தார். (4)





## சென்னையை வீழ்த்தியது ராஜஸ்தான்

13-வது ஐபிஎல் சீசனின் நேற்று முன்தினம் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அதிக பட்சமாக ஜடேஜா 30 பந்துகளில் 35 ஓட்டங்கள் சேர்த்தார். டோனி (28), சாம் கரன்(22), ராயுடு (13) ஓட்டங்களுடன் திரும்பினர். இதனையடுத்து 126 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணி இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த ஸ்டீவ் ஸ்மித் 34 பந்துகளில் 26 ஓட்டங்களும், ஜோஸ் பட்லர் 48 பந்துகளில் 70 ரன்களும் எடுத்தனர். சென்னை தரப்பில் தீபக் சஹார் 2 விக்கெட்டுகளையும், ஜோஷ்ஹேசில்வுட் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். (4)

## லங்கன் பிறீமியர் லீக் யாழிலிருந்து மூன்று வீரர்கள்

LPL எனப்படும் லங்கன் பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடருக்கான ஐந்து அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஐந்து அணிகளில் யாழ்ப்பாணத்தின் பெயரிலும் ஒரு அணி விளையாடவுள்ளது.

மேலும் யாழ்.அணிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து 3 தமிழ் வீரர்கள் விளையாடவுள்ளனர்.

கபில்ராஜ், கே. டினோஷன், வை.விஜாஸ்காந் ஆகிய வீரர்களே யாழ்.அணிக்காக விளையாடவுள்ளனர். (4-7)

LPL T20
LANKA PREMIER LEAGUE 2020

## கிளிநொச்சியில்...

மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் காரணமாக இரு தரப்பினருக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பு காரணமாக மோட்டார் சைக்கிளை ஒரு சாரார் அபகரித்துள்ளனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர் நேற்று ஓர் கைக்குண்டினை காட்டி மோட்டார் சைக்கிளை தரும்படி மிரட்டிய நிலையில் சம்பவம் தொடர்பான தகவல் கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட கைக்குண்டை வைத்திருந்த நபரை கைது செய்ததுடன் அச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,100,312)

## மாநகர சபை...

பாணம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகர் இ.கி.அமல்ராஜ். இது தொடர்பில் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளாரென அக்கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒக்ரோபர் 13ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக அறிவித்துள்ளார்.

அதனையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் கடிதம் மூலம் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு அறிவித்துள்ளார். (ம-3,18)

## 21 தொற்றாளர்...

பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட 21 பேர் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். (ம-3,60)

## மேலும் ஒரு...

செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர் காங்கேசன்துறை பகுதியில் உள்ள ஒரு கடற்படை முகாம் ஒன்றில் பணி புரிவதாகக் கூறப்படுவதுடன் இவர் விடுமுறையில் தனது வீட்டிற்கு திரும்பியுள்ளார்.

கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து தாய், தந்தை, தம்பி மற்றும் சகோதரி தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (ம-3)

## கொரோனாவின்...

பாராளுமன்றத்தில் நேற்று கொரோனா வைரஸ் விவகாரம் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பியிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை கொத்தணி பரவல் ஏற்பட்ட கையோடு அதன் ஆரம்பப் புள்ளியை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதுபோல வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஊழியர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனையும் நடத்தப்பட்டது.

ஆரம்பப் புள்ளி தொடர்பில் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

உரிய வகையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும்.

துறைசார் நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரமே கொரோனா விவகாரத்தில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அதேவேளை கொரோனா வைரஸ் என்பது உலகத் தொற்றாகும்.

எனவே தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு அது இலங்கை மக்கள் அனைவருக்கும் செலுத்தப்படும் வரையில் தற்போதைய நிலையிலிருந்து எம்மால் விடுபட முடியாது என்றார். (ம-3)

## வீடு திரும்ப...

கொக்கல சுற்றுலா விடுதியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தும் முகாமிலிருந்து தனிமைப்படுத்தல் முடிந்த நிலையில் வீடு திரும்பவிருந்த 24 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இவர்கள் தற்போது கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இந்த 24 பேரும் தனிமைப்படுத்தலில் 14 நாட்கள் வைக்கப்பட்டிருந்த நிலையில் வீடு திரும்பவிருந்தபோது எடுக்கப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. (ம-3)

## இலங்கைக்கு...

கத்துறை அதிகாரிகள் நாட்டு படகுடன் நேற்று அதிகாலை பறிமுதல் செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3)

## 186 பேருக்கு...

தொடர்ச்சியாக மேலும் 186 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த தகவலை இராணுவத் தளபதி வெளியிட்டுள்ளார்.

அதனடிப்படையில் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனா தொற்றினை அடுத்து 2 ஆயிரத்து 348 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் இதுவரை 5 ஆயிரத்து 811 பேர் கோவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## சபாநாயகரின்...

பற்றுங்கள் என பாராளுமன்றத்தில் கூறிக்கொண்டு சபாநாயகரே முகக் கவசம் இல்லாது சபையை வழிநடத்துகின்றார்.

சபாநாயகர் சபைக்கு தவறான எடுத்துக் காட்டென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டை முன்வைத்ததுடன், உடனடியாக பாராளுமன்றத்தை ஒத்திவைத்து விட்டு சுகாதார வழிமுறைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கைக்கு பதில் தெரிவித்த சபாநாயகர் இரண்டாம் உலக யுத்தத்தில் குண்டு மழைகள் பொழிந்து கொண்டு இருந்த நேரத்தில் கூட பாராளுமன்றம் கூடியது, இப்போது எவ்வாறு பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது என்றும் கூறினார். (ம-3)

## 20...

றம் தெரிவித்துள்ளது. 20ஆவது திருத்தம் குறித்த உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.


அதன்படி, 20 ஆவது திருத்தத்தின் 3, 5, 14 மற்றும் 22ஆவது பிரிவுகள், அரசியலமைப்புடன் முரண்படுவதாகவும், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின், பொதுவாக்கெடுப்பு நடத்தி மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

3ஆவது மற்றும் 14ஆவது பிரிவுகளை குழுநிலை விவாதத்தின்போது திருத்தம் செய்து இலகுபடுத்தலாம் என்றும், அவ்வாறு செய்தால், 5ஆவது பிரிவில் உள்ள முரண்பாடு நீக்கப்படும் என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, 20ஆவது திருத்த விவாதத்தை ஒத்திவைக்குமாறு எதிர்க் கட்சிகள் கோரி வருகின்றன.

எனினும், இன்று காலை விவாதத்தை ஆரம்பிப்பது என்ற உறுதியான நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பஞ்சாப் வெற்றி



டில்லி 164/5 (20 ஓவர்)
பஞ்சாப் 167/5 (19 ஓவர்)
பஞ்சாப் 5 விக்கெட்டுக்களால் வெற்றி
ஆட்டநாயகன் தவான் (டில்லி)


கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB
சீட்டிழுப்பு திகதி 20/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 2576
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 8 33 36 49

தன நிதானய
திகதி - 2020.10.20
சீட்டிழுப்பு இலக்கம் - 331
S 05 23 24 77

நீரோகா
திகதி 20/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0713
லக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 13 27 41 51

மஹஜன சம்பத
திகதி 2020/10/20
சீட்டிழுப்பு இலக்கம் 4281
Y 3 8 8 0 7 3

மெகா பவர்
திகதி 20/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0648
H 01 — 30 52 56 63

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1251 — நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 20.10.2020 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: N 01 03 09 41
50,688,422.80
SUPER 500: 8 1 6 0

ராசி
திகதி 20/10/2020 — வெற்றி வாரம் 2958
சுப்பர் ஜக்பொட் ரூ. 26,69,845 — வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 12 19 21 57 — மீனம்
6362 — 976
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,882,000

அத கோடிபதி — ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு இல: 1077 — வர்ணம்: இளநீலம் — சீட்டிழுப்பு திகதி: 2020.10.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,789,120/-
வெற்றி இலக்கங்கள் 10 32 40 44 A

சனிதா
செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2020.10.20 — சீட்டிழுப்பு இல.: 3407 — வர்ணம்: இளநீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,890,271.60
வெற்றி இலக்கங்கள் 21 60 63 67 W
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 8533

சீட்டிழுப்பு இல 640 — 20.10 2020
E 45 55 56 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,733,660
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

## மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com 077 219 4331

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1250/= (C-548)

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | |
|---|---|---|---|---|
| 976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா |

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன (C-308)

2022ல் நீங்களும் அமெரிக்காவில்..

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள். விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

V2 Travels www.facebook.com/v2tandt

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நாயன்மார்க்கட்டு, கனகரெத்தினம் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (4427)

பிரித்துக் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை.

076 888 4625

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, நாயன் மார்கட்டு வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (4423)

2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

முன்பகுதிக் காணி 1 பரப்பு நான்கு இலட்சம்.

பின்பகுதிக் காணி 1 பரப்பு மூன்று இலட்சம்.

தரகர் தேவையில்லை.

077 623 4204

## வீடு விற்பனைக்கு

பிரம்படி 2ஆம் ஒழுங்கை கொக்குவிலில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு

076 702 3565


தற்போதுள்ள நிலைமையின் பொருட்டு

# யாழில் மேலும் வைத்தியசாலைகள் நிறுவ வேண்டிய தேவையுள்ளது

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தின் தற்போதுள்ள நிலைமையின் பொருட்டு, மேலும் வைத்தியசாலைகள் நிறுவப்பட வேண்டிய தேவை உள்ளதாக, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

மருதங்கேணி வைத்தியசாலையை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றியமை தொடர்பில் பொது மக்கள் மத்தியில் பல அதிதிருப்திகள் எழுந்துள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது.

எனவே, மருதங்கேணி வைத்தியசாலை மிக அவசியமான ஒன்றாகதற்போது காணப்படுகின்றது. மருதங்கேணி கொரோனா சிகிச்சை நிலையத்தில் 21 நோயாளர்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த வைத்திய நிலையத்தினால், பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பொது மக்களுக்கு பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

சுகாதார பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் எந்தவித பீதிக்குள்ளும் ஆளாகத் தேவையில்லை.

மருதங்கேணி வைத்தியசாலை அத்தியாவசியமான தேவையாக உள்ளது. மாவட்டத்தில் தற்போது எழுந்துள்ள இந்த பிரச்சினையால், மேலும் பல வைத்தியசாலைகளை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் அச்சமின்றி இருக்குமாறும், அனைவரும், முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும், கைகளைக் கழுவிப் பயன்படுத்துமாறும், அடிக்கடி அதாவது சனிரைசர் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ம-03.101)


## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட கட்டடத்தில் கீழ்வருவன வாடகைக்கு உண்டு.

1. வியாபார நிலையம் ( கீழ்த்தளம், மேல்த்தளம் )
2. தனிவழிப்பாதை கொண்ட இணைந்த குளியலறையுடன் கூடிய தளபாடமிடப்பட்ட (T.V, அலுமாரி) தனி அறைகள்.

(4429) 077 105 6694

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 10 . 1948

மறைவு 18 . 10 . 2016

அமரர்

### புலேந்திரன் செல்வமணி

(செல்லக்கண்டு)

திதி சதுர்த்தி

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்,
உதட்டோரம் உதிர்க்கும் புன்னகையும் கொண்டு
வாழ்ந்த நீங்கள் நீள்துயில் கொண்டு நான்காண்டாகிவிட்டது.
ஆறாத்துயரில் தவிக்கின்றோம், ஆற்றத்தான் ஆளில்லை.
உடன்பிறந்தவர்கள், உற்றார் உறவினருடன்
உன்னத உறவைப் பேணி வளர்த்து பேரக் குழந்தைகளுக்கு
பேரன்பை வழங்கிய நீங்கள் மண்ணிலிருந்து மறைந்தாலும்
எங்கள் மனதில் என்றும் நிறைந்து வாழ்கின்றீர்கள்.

(4425)

முடமாவடி, யாழ்ப்பாணம்.

ஆ. தனஞ்செயன் 077 172 7292

என்றும் நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள் (C-308)

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

## ஆரம்பம்

விஜயதசமியை முன்னிட்டு Spoken English வகுப்புகள் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகின்றன. (C-558)

40 % கட்டணக் கழிவு.

CANADIAN LANGUAGE CENTER

076 057 9999

## CHEMISTRY ZOOM CLASSES

- Jaffna -

### க. சிவத்திரன் B.Sc (Hons)

2021 A/L PHYSICAL THEORY

ஆரம்பம் 03.11.2020
7.30 p.m - 9.00 p.m

Tue, Fri, Sun - 7.30 p.m. - 9.00 p.m
Wed Paper - 6.00p.m - 7.30 p.m

2022 A/L GASES (UNIT - 04) THEORY

ஆரம்பம் 04.11.2020
7.30 p.m - 9.00 p.m (4426)

Mon, Wed, Thur, Sat - 7.30 p.m. - 9.00 p.m

Normal Call : 077 008 6416

01.06.2020 அன்று ஆரம்பித்து தொடர்ந்து உங்கள் இறுதிப் பரீட்சை வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நேரடி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் இது தொடரும்.

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் யாரும் பங்குபற்றலாம்.

2021 BATCH AND 2020 DAY BATCH - PAPER CLASS
DAILY 5.30 A.M - 7.00 A.M, START 01.11.2020.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.